The History of Christianity in India

கிபி 18 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் சீர்திருத்த திருச்சபையின் ஆரம்பம்...



Presented by
Rev. D. David
Lesson: 6
Part: Two

முன்னுரை



- <u>இந்தியாவில் அந்நிய மதங்களின் வருகை</u>: கிமு 3500 முதல் கிமு 1500 வரை இருந்த சிந்து சமவெளி நாகரிகமானது, மத்திய ஆசியாவிலிருந்து நாடோடிகளாக வந்த ஆரியர்களின் காட்டு மிராண்டித்தனமான படையெடுப்பால் சிந்து சமவெளி பகுதியில் வாழ்ந்துவந்த திராவிடர்களை, விரட்டிவிட்டு, புதிய ஆட்சியாளர் களாக மாறினார்கள். திராவிடர்கள் இயற்கையை (Nature Worship) வணங்கி வந்தார்கள், ஆனால் ஆரியர்கள், வைதீக மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து ரிக், யஜூர், சாம, மற்றும் அதர்வண போன்ற வேதங்களை கொண்டிருந்தார்கள். கிபி 7- ஆம் நூற்றாண்டில் தோன்றிய இஸ்லாமிய எழுச்சியினால் முஸ்லிம்களான அரேபியர்கள், சிந்து (பாகிஸ்தான்) பகுதியை கைப்பற்றி, வட இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். கிபி 12- ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவை முகம்மது கோரி வென்றதால் இஸ்லாம் இந்தியாவின் மதம் மற்றும் கலாச்சார பாரம்பரியமாக மாறியது. பின்னர் கிபி 16 -ஆம் நூற்றாண்டு முதல், ஐரோப்பியர்கள் மூலம் இந்தியாவில் மேற்கத்திய கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது.
- <u>ஐரோப்பிய சாம்ராஜ்யம்</u>: இந்தியாவில் ஐரோப்பியர்களின் வருகைக்கு வித்திட்ட வாஸ்கோடகாமா, வியாபாரம் செய்வதற்காக கடல் வழியைக் கண்டுபிடித்து, மே மாதம் 20, 1498 - இல் கேரளாவின் கோழிக்கோடு வந்துசேர்ந்தார். இவருடைய வருகையைத் தொடர்ந்து, போர்த்துகீசியர்கள் (Portugal), கோழிக்கோடு (1502), கோவா (1510) பகுதிகளிலும், டச்சுக்காரர்கள் (Netherlands), புலிக்காடு (Pulicat 1609), மற்றும் நாகப் பட்டணத்திலும் (1660), டேனிஷ்காரர்கள் (Denmark), தரங்கம்பாடி (1620) மற்றும் செராம்பூரிலும் (1676), ஆங்கிலேயர்கள் (England), மசூலிப்பட்டணம் (1622), மெட்ராஸ் (1639), மற்றும் கல்கத்தாவிலும் (1689) இறுதியாக பிரெஞ்சுக்காரர்கள் (France) பாண்டிச்சேரியிலும் (1664) தங்கள் கோட்டைகளையும், குடோன்களையும் கட்டினார்கள்.

முகலாயப் பேரரசு (கிபி 1526-1707)





- முகலாயப் பேரரசு: முஸ்லீம் படைத்தளபதிகள் ஆப்கானிஸ்தானில் காபூலில் இராணுவத் தளத்தை நிறுவி, தெற்கு வரைக்கும் சென்று இந்திய துணைக் கண்டத்தை கைப்பற்றினார்கள். இந்நிலையில் பாபர் என்ற இளவரசன் 1526-இல் இந்தியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி முகலாயப் பேரரசை நிறுவி, ஐரோப்பியர்களின் வருகை வரை இந்தியாவின் கணிசமான பகுதியை முகலாயர்கள் ஆட்சி செய்து வந்தார்கள்.
- முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி: இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த முகலாயர்கள், ஆரம்பத்தில் ஐரோப்பிய வர்த்தகர்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். ஆனால் உள்நாட்டில் ஏற்பட்ட போரினாலும், சில அரசர்களின் தவறான கொள்கைகளினாலும், அதிகார துஷ்டபிரயோகத்தாலும் முகலாய பேரரசு பலவீனமடைந்தது. இந்தியாவின் பல பகுதிகளில் இந்துக்களும், முஸ்லீம்களும் இடையே மதச்சண்டையிட தொடங்கினார்கள். இதனால் சக்திவாய்ந்த புதிய ராஜ்யங்கள் உருவாகி, முகலாய பேரரசின் நிலப்பகுதிகளை கைப்பற்றி குறுநில மன்னர்களாக ஆட்சி செய்து வந்தார்கள். இதுவே முகலாயர்களின் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்தது.
- வீழ்ச்சியின் பாதிப்பு: 17-ம் நூற்றாண்டின் இறுதியில், முகலாயப் பேரரசு இந்தியாவின் மீதான தனது பிடியை இழக்கத் தொடங்கியது. கிபி 1707- இல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் இறந்தபோது, முகலாய பேரரசு வேகமாக வீழ்ச்சியடைந்து, பல குறுநில மன்னர்களின் தலைமையில் முகலாய கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்தன. முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைந்த நிலையை ஆங்கிலேயர்கள் மற்றும் பிரெஞ்சுக் காரர்கள் தங்களுக்கு சாதகமாக்கி, இந்தியாவை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சி செய்தார்கள்.

காலனித்துவமும் கிறிஸ்தவமும்



- <u>காலனித்துவம் என்றால் என்ன?</u> காலனித்துவம் என்பது ஒரு நாடானது, மற்றொரு நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தி, தன்னுடைய ஆதிக்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் நாடுகளின் இயற்கை வளங்கள், மலிவான உழைப்பு, ஊதியம் மற்றும் கட்டுப் பாடில்லா இலாபங்களை பெற்றுக்கொள்வதாகும்.
- <u>காலனித்துவம் மற்றும் கிறிஸ்தவம்</u>: கிறிஸ்தவமும் காலனித்துவமும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையவை, ஏனெனில் ரோமன் கத்தோலிக்க திருச்சபையும், சீர்திருத்த திருச்சபையும், ஐரோப்பிய நாடுகளின் மதங்களாக இருந்ததால் , கிறிஸ்தவத்தை தங்கள் காலனி நாடுகளில் பரப்புவதற்கு ஆதரவாய் இருந்தர்கள். காலனித்துவம் மூலமாக கிறிஸ்தவ மிஷனரிகளுக்கு சட்ட பூர்வமான பாதுகாப்பும் சலுகைகளும் கிடைத்தது. ஒருவகையில் கிறிஸ்தவம் காலனித் துவத்தின் மூலமாகவே கிறிஸ்தவம் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது.
- <u>இந்தியா எப்படி காலனி நாடாக மாறியது?</u>: இந்தியாவில் வியாபாரம் செய்யவந்த ஐரோப்பியர்கள் மூலமாக முதலில் எந்த ஒரு அரசியல் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. ஆனால் இந்தியாவின் ஏகாதிபத்திய வியாபாரத்தை கைப்பற்றுவதற்காக இந்திய ஆட்சியாளர்களுக்கு அதிக சலுகைகளை கொடுத்தார்கள். இந்திய இராஜியங்களுக்கு இடையே நடைபெற்ற உள்நாட்டு மோதல்கள், ஒற்றுமையின்மை, சாதீய பாகுபாடுகள், மதச்சண்டைகள் நிறைந்து இருந்த காலகட்டத்தில் ஐரோப்பியர்களின் பொருளாதார வலிமையும் ,உயர்ந்த தொழில்நுட்பம், இராணுவ தளவாடங்கள் மூலமாக கொஞ்சம் கொஞ்சமாக அரசியல் அதிகாரம் பெற்று தங்களின் வலிமையை இந்தியாவில் பெருக்கிக்கொண்டார்கள்.

Advent of Europeans in India

போர்த்துகீசிய காலனித்துவம் (கி.பி 1502-1663)

- <u>போர்த்துகீசியர்களின் ஆதிக்கம்</u>: *1502 -இல், போர்த்துகீசியர்கள் கேரளாவின் கோழிக்கோடு, கொச்சி மற்றும் கிராங்கனூரில் (முசிறி துறைமுகம்) வர்த்தக மையங்களை நிறுவி முஸ்லீம் அரபியர்களின் ஏகாதிபத்தியத்திற்கு (Monopoly) முற்றுப்புள்ளி வைத்தார்கள். பின்னர் கோவா, பம்பாய், டையு, டாமன், ஹவேலி, தாத்ரா நகர் போன்ற கடற்கரையோர பகுதிகளில் வர்த்தக கிடங்குகளை ஏற்படுத்தி கோவாவை தங்கள் பேரரசின் மையமாக கொண்டு காலனித்துவத்தை நிலை நாட்டினர்கள்.*
- <u>போர்த்துகீசிய சாம்ராஜ்யம்</u>: *போர்ச்சுகீசியர்கள் கத்தோலிக் கர்களாக இருந்ததால் போப்பாண்டவரின் கட்டளையின்படி ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் மூலமாக நற்செய்திபணி செய்து திருச்சபைகளை நிறுவி சமுதாய மேம்பாட்டு பணிகளையும் செய்ய ஆரம்பித்தார்கள். இந்நிலையில் போர்த்துகீசியர்கள் இந்தியாவில் அரசியல், மற்றும் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள்.*
- <u>போர்த்துகீசியர்களின் வீழ்ச்சி</u>: *போர்த்துகீசியர்களின் வர்த்தகம் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஏகாதிபத்தியம் (Monopoly) கிபி 1595 வரை கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. ஆனால் 17- ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆங்கிலேர்களின் கிழக்கு இந்திய கம்பெனியும் ,ஹாலந்து டச்சுகாரர்களின் கிழக்கு இந்திய கம்பெனியும் ஆசியாவின் ஏகாதிபத்திய வர்த்தகத்தை கைப்பற்றுவதற்கு முயன்றன. போர்த்துகீசியர்களின் வீழ்ச்சிக்கு முகலாய பேரரசும் ஓரளவு காரணமாக இருந்தது. இந்திய கடல்பகுதிகளில் வர்த்தகத்திற்கு வந்த டச்சுக்காரர்கள், தங்களின் அதிநவீன கடற்படை மூலமாக போர்த்துகீசியர்களிடம் இருந்து கிபி 1639- இல் கோவாவையும் 1663 -இல் கேரளாவின் மலபார் கடற்கரையையும் கைப்பற்றினார்கள். இதனால் இந்தியாவில் போர்த்துகீசியர்கள் செல்வாக்கு இழந்தார்கள்.*

ஹாலந்து டச்சுக்காரர்களின் காலனித்துவம் (கி.பி 1604-1825)



- *<u>1). டச்சுக்காரர்களின் ஆதிக்கம்</u>:* ஹாலந்தின் கிழக்கு இந்திய கம்பெனியானது, 1602- இல் நிறுவப்பட்டு, *Vereenigde Oost-Indische Compagnie (VOC)* என்ற பெயரில் செயல்பட்டு வந்தது. போர்த்துகீசியர்களை தொடர்ந்து, டச்சுக்காரர்கள் இந்தியாவில் வாணிபம் செய்ய வந்தார்கள். கேரளாவின் கோழிக்கோடு மன்னர் டச்சுக்காரர்களைப் பயன்படுத்தி, மலபார் பகுதியில் போர்த்துகீசியர்களின் ஏகாதிபத்தியத்தை வெளியேற்றுவதற்காக 1604 நவம்பர் 11 -ஆம் தேதி ஒரு ஒப்பந்தம் செய்தார். இவர்கள் மசூலிப்பட்டணம் (1605), பழவேற்காடு (*Pulicat*) (1608) போன்ற இடங்களில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவினார்கள்.
- *<u>2). அதிநவீன கடற்படை</u>:* டச்சுக்காரர்கள் கடல் வர்த்தகத்தில் மிகப பெரிய ஜாம்பவான்களாக இருந்தார்கள். இவர்கள் இந்தியாவின் மசாலாப் பொருட்களை வாங்கி ஐரோப்பிய நாடுகளில் வர்த்தகம் செய்தார்கள். விலைமதிப்பற்ற இரத்தின கற்கள், மிளகு, அவுரி இலை (*Indigo*), தேநீர், காபி, பருத்தி, ஜவுளி வகைகள், அரிசி, சர்க்கரை, பட்டுகள், உப்புப்பொருள் மற்றும் ஓபியம் போன்ற பொருட்களை வர்த்தகம் செய்தார்கள்.
- *<u>3).டச்சுக்காரர்களின் கோட்டைகள்</u>:* டச்சுக்காரர்கள் தங்கள் வலிமையை பயன்படுத்தி சூரத் (1621), கொழும்பு (1656), தூத்துக்குடி (1658), டாக்கா (வங்கதேசம் 1650), நாகப்பட்டினம் (1659), மலபார் கடற்கரை (1663) ஆகிய இடங்களில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தார்கள். இவர்களுக்கு மொகலாய ஆட்சியாளர் களான ஷாஜகான், ஔரங்கசீப் மற்றும் ஜஹந்தர் ஷா (*Jahandar Shah*) ஆகியோரும் ஒத்துழைப்பு கொடுத்ததினால் கிபி 1661- ல் மலபார் கடற்கரையில் போர்த்துகீசியர்களின் ஏகாதிபத்தியத்தை தோற்கடித்து ஐரோப்பாவில் கருப்புத் தங்கம் என்று அழைக்கப்பட்ட மிளகு வர்த்தகத்தின் ஏகபோக உரிமையை டச்சுக்காரர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள்.

டச்சுக்காரர்களின் காலனித்துவம் (கி.பி 1604-1825)

- *4). <u>நற்செய்திபணி</u>:* டச்சுக்காரர்கள் ஹாலந்து சீர்திருத்த திருச்சபையை சேர்ந்தவர்களாக இருந்ததால் ரோமன் கத்தோலிக்க போர்த்துகீசியர்களின் கோட்டைகளை கைப்பற்றி, அங்கிருந்த ரோமன் கத்தோலிக்க மிஷனரிகளை பவள கடற்கரை பகுதிகளில் இருந்து *(Pearl Fishery Coast)* வெளியேற்றி போர்த்துகீசியர்கள் இந்தியாவில் கட்டியிருந்த ஆலயங்களையும், துறவியர் மடங்களையும் கைப்பற்றிக்கொண்டார்கள். இந்தியாவில் 80 ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்தினார்கள். டச்சுக்காரர்களின் இராணுவ வீரர்களுக்கு நற்செய்தி அறிவிக்க மதகுருமார்கள் *(Military Chaplains)* இருந்தபோதிலும், இந்தியாவில் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு எவ்வித அக்கறையும் காண்பிக்கவில்லை. ஏனெனில், வியாபாரத்தில் பணம் சம்பாதிப்பதுதான் அவர்களின் முக்கிய குறிக்கோளாக இருந்தது.
- *5). <u>டச்சுக்காரர்களின் வீழ்ச்சி</u>:* இந்திய தீபகற்பத்தில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் அசூர வளர்ச்சி டச்சுக்காரர்களின் ஏகாதிபத்திய வர்த்தகத்திற்கு கடுமையான சவாலாக இருந்து, இரத்தக்களரி போருக்கு வழிவகுத்தது. கேரளாவின் திருவாங்கூர் சமஸ்தான மன்னர் மார்தாண்ட வர்மா கி.பி 1741 -இல் குளச்சல் துறைமுகப் போரில் டச்சுக்காரர்களுக்கு எதிராக மிகப்பெரிய தாக்குதலை நடத்தி, மலபார் கடற்கரை பிராந்தியத்தில் மிளகு வர்த்தகத்தில் ஏகாதிபத்திய வர்த்தகத்தை கைப்பற்றிக்கொண்டார். மேலும் ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களுக்கு எதிராக நான்கு போர்களை (1652-54, 65-67, 72-74, 80-84) நிகழ்த்தி, டச்சுக்காரர்களை தோல்வியுற செய்தார்கள். இறுதியாக 1825, மே மாதம் 1- ஆம் நாளில் டச்சுக்காரர்கள், ஆங்கிலேயருக்கும் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவில் டச்சுக்காரர்களின் எல்லா கோட்டைகளும், சொத்துக்களும் ஆங்கிலேயருக்கு மாற்றப்பட்டது. இத்துடன் டச்சுக்காரர்களின் காலனித்துவம் இந்தியாவில் நிறைவு பெற்றது.

டேனிஷ்காரர்களின் காலனித்துவம் (கி.பி 1616-1845)

- *<u>1).டேனிஷ் காலனித்துவம்</u>: டென்மார்க்-நார்வே மன்னர் கிறிஸ்டியன் IV, கிபி 1616- இல் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியை ஏற்படுத்தினார். போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்களை தொடர்ந்து டேனிஷ்காரர்கள் 1616-ம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியா வந்தார்கள். 1620- இல் தஞ்சையில் நாயக்கர்களிடமிருந்து தரங்கம்பாடியை பெற்றுக்கொண்டார்கள்.*
- *<u>2). இந்தியாவில் வர்த்தகம்</u>: தரங்கம்பாடி வர்த்தகத்தில் உலகளாவிய பெரிய பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது, டேனிஷ்காரர்கள் தங்கள் தொழிற்சாலைகளை ஆந்திராவில் மசூலிப்பட்டணம், மேற்கு வங்கத்தில் செராம்பூர் (1678), கேரளாவில் கோழிக்கோடு (1752) மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் (1750) தொழிற்சாலைகளை நிறுவினார்கள். டென்மார்க், நார்வே மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து உள்ளூர் நெசவாளர்களுடன், தொழிலில் ஈடுபட்டார்கள். தரங்கம்பாடியிலிருந்து பட்டு துணிகள், வர்ணம் பூசப்பட்ட பருத்தி துணியை ஏற்றுமதி செய்தார்கள்.*
- *<u>3).டேனிஷ்காரர்களின் வீழ்ச்சி</u>: ஐரோப்பாவில் நெப்போலியன் தலைமையில் பிரான்சுக்கும், இங்கிலாந்திற்கும் இடையே நடந்த யுத்தத்தில் (Napolenoic Wars), டேனிஷ்காரர்கள் நடுநிலைமை அதே நேரத்தில் பிரெஞ்சுகாரர்கள் மற்றும் டச்சுக்காரர்களின் பொருட்களை அனுமதித்தார்கள். இது டேனிஷ்-ஆங்கிலேய போர்களுக்கு (கி.பி 1803 - 1815) வழிவகுத்தது. இதில் டேனிஷ் காரர்களின் 23 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டது. இந்நிலையில் ஆங்கிலேயர்கள் டேனிஷ் காலனிகளைக் கைப்பற்றி, செராம்பூர் டேனிஷ் காலனித்துவ சொத்துக்களை கிபி 1839- லிலும், தரங்கம்பாடி சொத்துக்களை கிபி 1845- லிலும் ஒப்பந்தங்கள் மூலம் ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டார்கள். இப்படியாக டேனிஷ் காலனித்துவம் இந்தியாவில் இருந்து மறைந்தது.*

பிரெஞ்சு காலனித்துவம் (கி.பி 1664-1816)



- *1).பிரெஞ்சுகாரர்களின் சாம்ராஜ்யம்:* இந்தியாவில் வர்த்தகம் செய்வதற்காக பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி 1664- இல் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் போர்த்துகீசியர், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனிஷ்காரர்களுக்குப்பின் இறுதியாக பிரெஞ்சுக்காரர்களும் வர்த்தக தொழிற்சாலைகளை நிறுவ ஆரம்பித்தார்கள். ஆகவே 1668- ல் குஜராத்தின் சூரத், மற்றும் 1669 -ல் ஆந்திராவில் மசூலிப்பட்டணத்திலும் தங்கள் கோட்டைகளை அமைத்தார்கள். காலப்போக்கில் தங்கள் செல்வாக்கினால் கிபி 1673- இல் பிஜப்பூர் சுல்தானிடமிருந்து பாண்டிச்சேரியையும், கிபி 1690- இல் மேற்கு வங்காளத்தில் முகலாய ஆளுநரிடமிருந்து சந்தர்நாகூரில் (Chandernagore) துறைமுகப்பகுதியையும் பெற்றுக்கொண்டார்கள்.
- *2).இந்தியாவில் வர்த்தகம்:* இந்தியாவில் கிபி 1707- ல் ஔரங்கசீப் மறைவிற்க்குப் பிறகு முகலாயப் பேரரசு சரிந்ததினால், இந்தியாவின் வர்த்தகத்தை கைப்பற்ற, பிரெஞ்சுக்காரர்கள் தொடர்ச்சியாக டச்சுக்காரர்களுடனும் பின்னர் ஆங்கிலேயர்களுடனும் ஆயுத மோதல்களில் ஈடுபட்டார்கள். கிபி 1720-ல் பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்த சூரத், மசூலிப்பட்டணம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினார்கள்.
- *3).பிரெஞ்சுகாரர்களின் நற்செய்திபணி:* ரோமன் கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்த பிரெஞ்சு ஆளுநர் பிரான்சிஸ் மார்ட்டின் 1701- இல் பாண்டிச்சேரிக்கு ஜேசுயிட் மிஷனரிகளை அழைத்தார். கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதனால் முதலியார்கள், வெள்ளாளர்கள் மற்றும் ரெட்டியார்கள் போன்ற மேல்சாதி மக்கள் மத்தியில் ரோமன் கத்தோலிக்க மதம் வேகமாக பரவியது. காலரா, சின்னம்மை, பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் சிறப்பாக செயல்பட்டதால் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த அநேகர் கிறிஸ்தவத்தை தழுவிக்கொண்டார்கள்.

பிரெஞ்சு காலனித்துவம் (கி.பி 1664-1816)

• <u>4). Joseph Francois Dupleix</u>: Dupleix திறமையானவர், இராஜதந்திரம் கொண்டவர்,அரசியல் தொலைநோக்கு பார்வையாளராக இருந்தவர். இவர் கிபி 1731 -ஆம் ஆண்டில் மேற்கு வங்கத்தில் சந்தர்நாகூர் பகுதியில் பிரெஞ்சு ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர்தான் இந்தியாவை பிரெஞ்சு சாம்ராஜியத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக செயல்பட்டவர். இவரது திறமையை கண்டு பிரெஞ்சு அரசாங்கம் கிபி 1742- இல் பிரெஞ்சு நிறுவனங்களுக்கும் கவர்னர் ஜெனரலாக நியமித்தது.

<u>5பிரெஞ்சு-ஆங்கிலேய போர்கள்</u>: Dupleix கிபி 1746 ல் சென்னையில் ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் இருந்த டேவிட் கோட்டையை (David Fort) கோட்டையை கைப்பற்ற முற்றுகையிட்டார். ஆனால் கைப்பற்றத் தவறிவிட்டார். பின்னர் Dupleix மேற்கு வங்காளத்தில் ஆங்கிலேயர்களின் வில்லியம் போர்ட்(William Fort) ஐ கைப்பற்ற நவாபுடன் உறவை வளர்த்துக் கொண்டது, ஆங்கிலேயரின் கலக்கத்திற்கு காரணமாக இருந்தது. இது கர்நாடக பகுதிகளில் (Carnatic Wars 1746-48, 49-54, 56-63) ஆங்கிலேயர்களுடன் தொடர்ச்சியான யுத்தத்திற்கு வழிவகுத்தது. இந்நிலையில் Dupleix - ஐ கிபி 1754 -இல் பிரான்சுக்கு வருமாறு பிரெஞ்சு மன்னர் கேட்டுக்கொண்டார். எப்படியெனில் பிரான்சும், இங்கிலாந்தும் ஐரோப்பாவில் சண்டையிட்ட போது பல்வேறு ஒப்பந்தங்களின் மூலம் தங்கள் நிர்வாக பகுதிகளை மாற்றிக் கொண்டார்கள்.

<u>6).ஆங்கிலேயர்களின் ஆதிக்கம்</u>: இந்தியாவில் ஒரு பிரெஞ்சு சாம்ராஜியத்தை உருவாக்க இருந்த டூப்ளெக்ஸின் (Dupleix) நம்பிக்கையைத் தகர்த்தவர் ஆங்கிலேய அதிகாரி இராபர்ட் கிளைவ். கிபி 1756 -ல் Battle of Plassey யுத்த களத்தில், இராபட் கிளைவ் சென்னையில் இருந்து கல்கத்தாவிற்கு சென்று வங்காள நவாப் படைத்தளபதியை தன்வசப்படுத்தி, வங்காளத்தை ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார்.

<u>6).பிரெஞ்சு காலனித்துவத்தின் அஸ்தமனம்</u>: கிபி 1761- ஆம் ஆண்டில் வந்தவாசி போரில், ஆங்கிலேயபடை, பாண்டிச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களின் படையை தோற்கடித்தது. இதனால் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் கொண்டிருந்த எல்லா கோட்டைகளும், தொழிற்சாலைகளும் ஆங்கிலேயர் வசமாயிற்று. இதற்கு பிறகு ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய கம்பெனி தென்னிந்தியாவிலும், வங்காளத்திலும் அரசியல் ரீதியாகவும், இராணுவ பலத்திலும் மிகப்பெரிய சக்தியாக விளங்கியது. இறுதியாக, 1816 -ஆம் ஆண்டு ஐரோப்பாவில் பிரான்சுக்கு எதிராக இங்கிலாந்து நடத்திய நெப்போலியன் போர்களைத் (Napoleonic Wars) தொடர்ந்து ஏற்பட்ட சமாதான உடன்படிக்கைகள் மூலமாக பாண்டிச்சேரி, சந்தர்நாகூர் (வங்காளம்), காரைக்கால், மாகே (கேரளா), யானம் (ஆந்திரா), மசூலிப்பட்டணம், கோழிக்கோடு மற்றும் சூரத் ஆகிய இடங்களில் இருந்த தொழிற்சாலைகளை பிரெஞ்சுக்காரர்களிடம் ஆங்கிலேயர்கள் திரும்ப கொடுத்தார்கள். ஆனால் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் இராணுவத்தை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இங்கு சட்டம் ஒழுங்கை பராமரிக்க காவல்துறை படையை மட்டுமே வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இப்படியாக இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் வியாபார ஏகாதிபத்தியத்தையும், அரசியல் அதிகாரங்களையும் ஆங்கிலேயர்களின் கடுமையான கட்டுப்பாட்டால் காலனித்துவம் அஸ்தமனமாக ஆரம்பித்தது. இருப்பினும், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயருக்கு எதிராக மைசூரில் இருந்த திப்பு சுல்தானின் இராணுவத்தை நவீனமயமாக்குவதில் தொடர்ந்து உதவியது.



How British
Conquered India
British
Company
Mughals
Indians

ஆங்கிலேயர்களின் காலனித்துவம் (கி.பி 1600-1947)

- *1).ஆங்கிலேயகிழக்கிந்திய கம்பெனி:* ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு கிபி 1599 -இல் ஆங்கில ராயல் சாசனம் கொடுக்கப்பட்டது (English Royal Charter). போர்த்துகீசிய வர்த்தகர்கள் தங்கள் வர்த்தகப் பொருட்களை, இந்தியாவில் விற்று மகத்தான லாபத்தை ஈட்டியதன் விளைவாக ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்து Queen Elizabeth I, 1600 -ம் ஆண்டு டிசம்பர் 31 அன்று தெற்கு ஆசியாவில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் அளித்தார்.

- *2). கிழக்கிந்திய கம்பெனியின் விஸ்தரிப்பு:* ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரிகள், இந்தியாவின் பெரும்பகுதிகளை ஆண்டுகொண்டிருந்த முகலாய பேரரசர் ஜஹாங்கீர் அரசனின் ஆதரவைப் பெற்று, இந்தியாவின் மேற்கு கடற்கரை பகுதிகளில் தங்கள் முதல் தொழிற்சாலையை 1611- இல் மசூலிப்பட்டணம், 1612 -இல் சூரத், கம்பயா (Cambaya) மற்றும் 1613- இல் கோவாவில் அமைத்தார்கள். 1615- இல் இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் I, முயற்சியினால் 1619 -இல் ஆக்ரா, 1620- இல் அகமதாபாத், 1625 -இல் பரூச், அர்மகான் (Armagaon) மற்றும் 1632- இல் கோல்கொண்டாவில் தொழிற்சாலைகளை அமைத்தது.

- *3)ஆங்கிலேயர்களின் கோட்டை:* ஆங்கிலேயர்கள் 1638- ஆம் ஆண்டில், சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டினார்கள். இது இந்தியாவின் தெற்கு பகுதியில் ஆங்கிலேயர்களின் பிரதான குடியிருப்பு பகுதியாக மாறியது. அப்படியே இந்தியாவின் கிழக்கு பகுதியில் தங்கள் தொழிற்சாலைகளை ஒரிசாவில் ஹரிஹராபூர் மற்றும் பாலசோர் (1633) மற்றும் வங்காளத்தில் ஹுக்ளி (1651) பகுதியிலும் நிறுவினார்கள். இந்நிலையில் கிழக்கிந்திய கம்பெனியானது 1668- இல் பம்பாயைக் கையகப்படுத்தி இந்தியாவின் மேற்கு பகுதிக்கு தலைமை பகுதியாக வைத்துக்கொண்டது.

ஆங்கிலேய காலனித்துவம் (கி.பி 1600-1947)



- *4).ஆங்கிலேய- போர்த்துகீசியப் போர்:* போர்த்துகீசியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் 1612-ம் ஆண்டு நவம்பர் 29-30 தேதிகளில் குஜராத்தின் சூரத்தில் நடைபெற்ற கடற்படை போரில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதினால் 150 ஆண்டுகள் இந்தியாமீது ஏகாதிபத்தியம் (Monopoly) செலுத்திவந்த போர்த்துக் கீசியர்களுக்கு வர்த்தக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெரிய பின்னிடைவு ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் போர்த்துகீசியர்கள் வசம் இருந்த டாமன்(Daman), டையு (Diu), சிட்டகாங் (Chittagong) ஆகிய பகுதிகளை கைப்பற்றினார்கள்.
- *5).திருமண சீர்வரிசை:* ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி 1647-ம் ஆண்டு வாக்கில், இந்தியா முழுவதும் 23 தொழிற்சாலைகளையும், கோட்டைகளையும் நிறுவியிருந்தார்கள். இதில் மிக முக்கிய தொழிற்சாலைகள் வங்காளத்தில் வில்லியம் கோட்டை, சென்னையில் செயின்ட் ஜார்ஜ் கோட்டை மற்றும் பம்பாய் கோட்டை ஆகியனவாகும். கிபி 1662 -ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் இரண்டாம் சார்லஸ் மன்னரை போர்த்துகீசிய இளவரசி கேத்தரீன் திருமணம் செய்துகொண்டதற்கு வரதட்சணையாக போர்ச்சுக்கல் மன்னர் பம்பாயை இங்கிலாந்துக்குக் கொடுத்தார்.
- *6).ஆங்கிலேய -மொகலாய உறவு:* இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி கொடுக்கமாட்டோம் என்று ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அறிவித்ததினால் முகலாய பேரரசர் ஔரங்கசீப் ஆங்கிலேயர்களோடு கொண்டிருந்த வர்த்தக உடன்படிக்கையை முறித்துக் கொண்டு, கிழக்கிந்திய கம்பெனி சொத்துக்களை பறிமுதல் செய்யவும் உத்தரவுகளை பிறப்பித்தார். இதனால் சென்னை மற்றும் பம்பாய் தவிர ஏனைய பகுதிகளை முகலாயர்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. கிபி 1689- ஆம் ஆண்டில், பம்பாயை முகலாய பேரரசின் வலிமையான கடற்படை முற்றுகையிட்டது.

ஆங்கிலேய காலனித்துவம்
(கி.பி 1600-1947)

- *7). குழந்தைப் போர் (Child's War):* முகலாயப் பேரரசின் கடற்படை பம்பாயை முற்றுகையின் காரணமாக பெரிய பஞ்சம் ஏற்பட்டு வெளிவுலகத்தோடு மஇருந்த தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டதால் கிழக்கிந்திய கம்பெனி ஔரங்கசீப்பிடம் சரணடைந்தது. ஆகவே 1690 கிழக்கிந்திய கம்பெனிக்கு 1,50,000 ரூபாய் அபராதம் விதித்து, எதிர்காலத்தில் நன்நடத்தைக்கு உறுதியளிக்க வேண்டும் என்ற கட்டளையை ஏற்றுக் கொண்டதால் முகலாய பேரரசர் ஔரங்கசீப், பம்பாய் முற்றுகையை நீக்குமாறு தன் படைகளுக்கு கட்டளையிட்டார். இதன் பின்னர் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி பம்பாயில் மீண்டும் தங்கள் நிலையை வலுப்படுத்திக்கொண்டு, கல்கத்தாவிலும் ஒரு புதிய தளத்தை அமைத்துக்கொண்டார்கள்.
- *8). நற்செய்திபணி சோறு போடாது:* ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியானது கிறிஸ்தவத்தை பரப்புவதைவிட பணம் சம்பாதிப்பதிலும் தான் அதிக கவனம் செலுத்தியது. இந்தியாவிலிருந்து பருத்தி, பட்டு, மிளகு, அவுரி இலை (Indico dye), உப்பு, மிளகு, தேநீர், மசாலாப் பொருட்கள், இஞ்சி, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை மற்றும் அபின் ஆகியவை இந்நிறுவனத்தின் முக்கிய வணிக பொருட்களாக இருந்தன. ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பத்தில், இந்தியாவிற்குள் மிஷனரிகள் மூலமாக கிறிஸ்தவம் பரவ செய்யும் முயற்சியை கடுமையாக எதிர்த்தது. ஏனெனில் இந்த முயற்சியானது, பெரிய பொருளாதார இழப்பை இங்கிலாந்து சந்திக்கும் என்று கூறி, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தங்கள் அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கை பயன்படுத்தி கிபி 1793-ம் ஆண்டு வரை எந்த ஒரு ஆங்கிலேய மிஷனெரிகளும் இந்தியாவிற்குள் வரமுடியாத அளவிற்கு தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்துக்கொண்டார்கள்.

ஆங்கிலேய காலனித்துவம்
(கி.பி 1600-1947)

- *<u>9).ஆங்கிலேய-கர்நாடகப் போர்கள்</u>: கர்நாடகப் போர் என்பது இந்தியாவின் கடலோர கர்நாடக பிராந்தியத்தில் தொடர்ச்சியான இராணுவ மோதல்கள் ஆங்கிலேயர்களுக்கும் இந்திய சிறு மற்றும் பெரிய மன்னர்களுக்கும் இடையே மூன்று பெரிய போர்கள் நடைபெற்றது (1746-48, 49-54, 56-63). இந்த மோதல்களில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவு மன்னர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் இடையே போர்கள் நடைபெற்றது. இதில் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே ஜெயித்தார்கள்.*
- *<u>10).பிரெஞ்சுபடையா? ஆங்கிலேய படையா?</u>: கர்நாடகப் போர்கள் நடைபெறுவதற்கு ஜோசப் பிராங்கோயிஸ் டுப்லிக்ஸ் (Joseph Francois Dupleix) காரணமாவார். இவர் 1742- ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனிக்கு ஆளுநராக உயர்ந்தார். Dupleix இந்தியாவில் பிரெஞ்சு செல்வாக்கை விரிவுபடுத்த உள்ளூரில் இருந்த சிறு மற்றும் பெரிய மன்னர்களுடன் நல்ல உறவுளை ஏற்படுத்தி, அவர்களின் இராணுவ படைகளுக்கு தொழில்நுட்பத்தை கற்றுக்கொடுத்து, தனக்கு ஆதரவாக வைத்துக்கொண்டு, ஆங்கிலேயர்களுக்கு எதிராக பெரிய படைகளை திரட்டினார். இருப்பினும், இவருக்கு எதிராகவும், நிகராகவும், துணிச்சலான சவால்களை கொடுக்கும்படி ஆங்கிலேயர்களின் இராணுவ இளம் அதிகாரி ராபர்ட் கிளைவ்(Robert Clive) இருந்தார்.*
- *<u>11). போரின் விளைவுகள்</u>: மூன்று கர்நாடகப்போரிலும் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதினால் பிரெஞ்சுக்காரர்கள், பாண்டிச்சேரிக்குள் இருக்கும்படி மட்டுப்படுத்தப்பட்டார்கள். முகலாய பேரரசின் வீழ்ச்சியுடன், பிரெஞ்சுக்காரர்களும் மட்டுப்படுத்தப்பட்டதால் ஆங்கிலேயர்கள் 3/5 இந்திய பிரதேசங்களை தங்கள் கட்டுபாட்டில் வைத்துக்கொண்டார்கள்.*

ஆங்கிலேய காலனித்துவம் (கி.பி 1600-1947)



- *<u>12). Black hole of Calcutta (1756)</u>: வங்காளத்தில் நவாப் Siraj-Ud-Daulah படையும், ஆங்கிலேயரின் படையும் நேரடியாக மோதிக்கொண்டது. பிரெஞ்சுக்காரர்கள் வங்காள நவாப் படைக்கு ஆதரவாக புதிய இராணுவ தொழில்நுட்பங்களையும், ஆயுதங்களையும் வழங்கி இருந்தது. நவாப் பெரும்படையுடன் கல்கத்தா வந்து ஆங்கிலேயர்களின் கோட்டையான William Fort ஐ 1756-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் நாள் கைப்பற்றி 170- க்கும் அதிகமான இராணுவ வீரர்களை பணைய கைதிகளாக பிடித்துச்சென்று, போதிய வெளிச்சம் மற்றும் காற்று இல்லாத சிறிய அறையில் செத்துமடியும்படி அடைத்துவைத்தார்கள். இது Black hole of Calcutta என்று அழைக்கப்படுகிறது.*
- *<u>13). பிளாசி போர் (Battle of Plassey 1757):</u> வங்காள நவாபிடம் 50,000 இராணுவ வீரர்களும், பிரெஞ்சுக்காரர்கள் கொடுத்த நவீன இராணுவ தளவாடங்களும் இருந்தன. ஆங்கிலேய படையிடம் 3,000 இராணுவ வீரர்களே இருந்தார்கள். இந்நிலையில் கல்கத்தா வந்த இராபட் கிளைவ், வங்காள நவாபை அகற்றுவதற்கு சதித்திட்டம் தீட்டி, நவாபின் இராணுவ தளபதியான மிர் ஜாபர் (Mir Jafar) என்பவர்க்கு லஞ்சம் கொடுத்து, வங்காளத்தின் நவாப் ஆக்குவதாகவும் உறுதியளித்தார். இதனால் 1757-ம் ஆண்டு ஜூன் 23 அன்று பிளாசி என்னும் இடத்தில் வங்காள நவாப் படையை எளிதாக தோற்கடித்து, கல்கத்தாவை மீண்டும் கைப்பற்றினார். ஆங்கிலேயர்கள் மிர் ஜாபரை வங்காள நவாப் ஆக அமர்த்தி தங்கள் கைப்பாவையாக வைத்துக்கொண்டார்கள்.*
- *<u>15).போரின் பாதிப்புகள்</u>: பிளாசி போரில் ஆங்கிலேயர் தரப்பில் 22 வீரர்களை மட்டுமே இழக்கக்கொடுத்து முழு வங்காளத்தையும் கைப்பற்றினார்கள். இப்போது இந்திய துணைக்கண்டத்தில் ஆங்கிலேயர்கள் மூன்றில் இரண்டு பகுதியை ஆளுகை செய்து, மியான்மர் மற்றும் ஆப்கானிஸ்தானையும் கைப்பற்றினார்கள்.*

ஆங்கிலேய காலனித்துவம்
(கி.பி 1600-1947)





- *16). <u>ஆங்கிலேய-மைசூர் போர்கள்</u>:* இந்தியாவில் ஆங்கிலேய படைக்கும், மைசூர் ஆட்சியாளரான ஹைதர் அலி படைக்கும், அப்படியே ஆங்கிலேய படைக்கும், ஹைதராபாத் நிஜாம் மற்றும் மராத்தியர் படைக்கும் இடையே பல்வேறு காலகட்டத்தில் நான்கு போர்கள் நடைபெற்றது *(1767-69; 1780-84; 1790-92;* மற்றும் *1799).* ஆங்கிலேயருக்கு எதிராக மைசூர் மன்னர் ஹைதர் அலி மற்றும் அவரது வாரிசான திப்பு சுல்தானும் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கில் இருந்து தாக்குதல் நடத்தினார்கள், அதே நேரத்தில் ஹைதராபாத்தின் நிஜாமின் படைகள் வடக்கிலிருந்து ஆங்கிலேயர்களை தாக்கின. இந்த யுத்தத்தின் விளைவாக மைசூர் மன்னர்களான ஹைதர் அலி மற்றும் திப்பு சூல்தான் ஆகியோர் கொல்லப்பட்டு, அவர்களின் இராஜியபாரம் எல்லாம் ஆங்கிலேயரின் கிழக்கிந்திய கம்பெனி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.
- *17). <u>ஆங்கிலேய-மராத்தா போர்கள்</u>:* மராத்தியர்கள் ஆங்கிலேய படைகளுக்கு சிம்ம சொப்பன்னமாக இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் *1757-* ல் வங்காளத்தை கைப்பற்றியவுடன், ஆங்லேய படைக்கும், மராத்திய படைகளுக்கும் இடையே மூன்று முக்கிய போர்கள் நடைபெற்றன *(1775–82, 1803–05, 1817–18).* இதில் முதல்போரில் ஆங்கிலேயர்கள் தோற்றுப்போனாலும் இரண்டாம் மூன்றாம் போர்களில் வெற்றிபெற்று இந்தியாவின் தெற்கில் உள்ள மராத்தா பேரரசும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தது. இப்படியாக இந்தியாவின் *4/5* நிலப்பகுதி முழுமையும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டில் வந்தது.

ஆங்கிலேய காலனித்துவம் (கி.பி 1600-1947)

- *<u>17).இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யம்</u>: வங்காளத்தில் 1757 - இல் பிளாசி போரைத் தொடர்ந்து 1764- இல் பக்ஸர் (Buxar) போர் நடந்தது. இதில் ஆங்கிலேயபடையின் கேப்டன் மன்றோவுக்கு எதிராக மூன்று படைகள் Mir Qasim of Bengal, Shukauddaula of Awadh மற்றும் முகலாய மன்னர் Shah Alam II ஆகியோர் கடுமையாக போரிட்டு தோற்றுப்போனார்கள்.*
- *<u>18). கவர்னர்-ஜெனரல்</u>: இங்கிலாந்து பாராளுமன்றத்தில் 1773- ஆம் ஆண்டில் இந்தியாவிற்கான ஆங்கிலேய ஒழுங்குமுறைச் சட்டம் (British Regulating Acts) இயற்றப்பட்டு, கல்கத்தாவின் William Fort கோட்டையின் ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஐ வங்காளத்தின் கவர்னர்-ஜெனரல் என்ற அதிகார மையத்தை ஏற்படுத்தினார்கள். இவர் கிபி 1772 முதல் 1785 வரை பொறுப்பில் இருந்தார். மேலும் இந்தியாவில் ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்கு அடித்தளம் அமைத்ததற்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் இராபர்ட் கிளைவ் (Robert Clive) பெருமைப்படுத்தப்படுகிறார். இந்நிலையில் 1773- ஆம் ஆண்டில் நிர்வாக வசதிக்காக இந்தியாவில் ஆங்கிலேயர்களின் முக்கியமான பம்பாய் மற்றும் மெட்ராஸ் கோட்டைகள் (St. David Fort) கல்கத்தாவில் இருக்கும் வில்லியம் கோட்டையின் (William Fort) கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது.*
- *<u>19). ஒழுங்குமுறை சட்டங்கள் (Regulation Acts)</u>: இங்கிலாந்து பாராளுமன்றத்தில் 1784- இல் பிரதம மந்திரி வில்லியம் பிட் (William Pitt) இந்தியாவிற்கான ஒழுங்குமுறை சட்டத்தை அறிமுகப்படுத்தி, கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, அதில் நேரடியாக தலையிட்டது. இப்படி 18- ஆம் நூற்றாண்டின் இறுதியில் 600 க்கும் அதிகமாக, தனித்தனியாக இருந்த சமஸ்தானங்களை ஒன்றாக இணைத்து இந்தியாவின் 90% பகுதிகளை ஆட்சி செய்ய ஆரம்பித்தது.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் (1706)



- *1).டேனிஷ் இந்தியா: 1616- ஆம் ஆண்டில், டென்மார்க்கில் டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனி நிறுவப்பட்டது. இவர்கள் கிபி 1620- இல் இலங்கையிலும், தமிழ்நாட்டில் தஞ்சாவூர் மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்த தரங்கம்பாடி துறைமுக பகுதிகளில் வர்த்தக தொழிற்சாலையை அமைக்க அனுமதி பெற்றார்கள்.*
- *2). இந்தியாவில் சீர்திருத்த திருச்சபை: இந்திய துணைக் கண்டத்தில் சீர்திருத்த திருச்சபை மூலம் கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு லூத்தரன் திருச்சபையை சேர்ந்த டென்மார்க் தேசத்து மன்னர் ஃபிரடெரிக் IV கனவுகண்டார். ஆகவே தனது அரண்மனையில் குருவானவராக பணியாற்றிய Dr. Lutkens என்பவரிடம் இந்தியாவுக்கு மிஷனெரிகளை அனுப்பும் பொறுப்பை கொடுத்திருந்தார்.*
- *3).சீர்திருத்த திருச்சபையின் பிறந்த நாள்: டென்மார்க் தேசத்திலிருந்து யாரும் இந்தியாவுக்கு மிஷனெரிகளாக செல்வதற்கு முன்வராதநிலையில், ஜெர்மனியின் பெர்லின் நகரில் ஹாலே பல்கலைக்கழக (Hally University) வேதாகம கல்லூரியில் படித்துக்கொண்டு இருந்த இரண்டு பேர் மிஷனெரிகளாக இந்தியா செல்வதற்கு 30 வயதான ஹென்றி ப்ளூட்சாவ் மற்றும் 23 வயதான பர்தொலொமேயு சீகன்பால்க் முன்வந்தார்கள். எப்படியெனில் இவர்களின் பேராசிரியர் Joachim Lange என்பவர் "இயேசு கிறிஸ்துவை அறியாத இந்தியா தேசத்தில் ஒரு ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்துவது, ஐரோப்பாவில் ஐந்நூறு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதற்கு சமம்" என்று கூறிய வார்த்தைகள் சீகன்பால்க் மனதில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆகவே இவர்களுக்கு ஜெர்மானிய தேசத்தில் லூத்தரன் திருச்சபையில் குருவானவர்களாக அருட்பொழிவு செய்யப்பட்டு, இந்தியாவில் டேனிஷ் காலனித்துவ பகுதியான தரங்கம்பாடிக்கு 1706-ம் ஆண்டு ஜூலை 9 வந்து சேர்ந்தார்கள். இந்த நாள் தான் இந்தியாவில் சீர்திருத்த திருச்சபையின் பிறந்தநாள் ஆகும்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் சீகன்பால்க் *(1683-1719)*

- *<u>4).டேனிஷ்காரர்களின் எதிர்ப்பு</u>: சீகன்பால்க் மற்றும் ப்ளூட்சாவ் ஆகியோர் டென்மார்க் அரசு ஆதரவுடன் தரங்கம்பாடிக்கு வந்தாலும், இங்கிருந்த டேனிஷ் இராணுவ தளபதி ஜே.சி.ஹாசியஸ் (J.C.Hassius) கிறிஸ்தவத்தை பரப்புவதற்கு தடைசெய்ய நினைத்தார். ஏனெனில் மிஷனெரிகள் மூலமாக டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் தவறான வழியில் இலாபம் ஈட்டுவதற்கும், டேனிஷ் காரர்களின் முறை தவறிய வாழ்க்கைக்கும் இடையூறாக இருக்கும் என்று கருதினார்.*
- *<u>5).பர்தொலொமேயு சீகன்பால்க்</u>: இவர் திறமையானவர், கடினமாக உழைக்கக்கூடியவர், தமிழ் மொழியை வேகமாக கற்றுக்கொண்டவர். தரங்கம்பாடியில் இருந்த சீரற்ற பருவகால சூழ்நிலையினால் சரீரத்தில் பெலவீனம் ஏற்பட்டு, அடிக்கடி நோய்வாய்ப்பட்டார். தரங்கம்பாடி பகுதிகளில் கிறிஸ்தவத்தை பரப்பியதற்காக, உள்ளூர் உயர்சாதி இந்து பூசாரிகளின் கடுமையான எதிர்ப்பை சம்பாதித்தாலும் தொடர்ந்து உழைத்தார்.*
- *<u>6).பெரிய சவால்கள்</u>: டேனிஷ் இராணுவ தளபதி ஹாசியஸ் மிஷனெரிகளுக்கு வந்த கடிதங்களை படித்தும், மறைத்து வைத்துக்கொண்டும், சந்தேகத்திற்கு இடமாகவே பார்த்தார். ஆகவே சீகன்பால்கிற்கு எதிராக தவறான குற்றச்சாட்டுகளை பதிவுசெய்து அவரை ஒரு சிறிய அறையில், யாரும் சந்திக்க முடியாதபடியும், பேனா மற்றும் மை எதுவும் கொடுக்காமல் நான்கு மாதம் சிறைக்கைதியாக வைத்து பின்னர் டென்மார்க் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் விடுதலை செய்யப்பட்டார். இந்நிலையில் 1708-ம் ஆண்டு மே மாதம் 1-ஆம் தேதி வந்த டேனிஷ் கப்பலில் மிஷனெரிகளுக்கான Dr. Lutkens கடிதம் மற்றும் 2000 டாலர் பணமும் ஹாசியஸ் அலட்சியதினால் கடலில் விழுந்ததால் ஆறு மாதங்கள் மிஷனெரிகள் பணம் இல்லாமல் பெரிய நெருக்கடியை சந்தித்தார்கள்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் சீகன்பால்க் (1683-1719)


ZION CHURCH
The first five Indian protestant converts of the Danish Mission were Baptized here in this Church in 1707.
Source: The Church in Madras, Page 252
Rev. G. Samuel, The Tranquebar Mission, Page 10

- 7). ஹென்றி ப்ளூட்சாவ் (1678–1747): இவர் நிதானமான, மென்மையான, ஆனால் உறுதியான ஆளுமை தன்மை கொண்டவர். சீகன்பால்க் மற்றும் ப்ளூட்சாவ் திட்டத்தின்படி சீகன்பால்க் போர்த்துகீசிய மக்களிடமும் ப்ளூட்சாவ் தமிழ் மக்கள் மத்தியில் நற்செய்திபணி செய்ய முடிவு செய்திருந்தார்கள். ஆனால் சீகன்பால்க் தமிழ் மொழியை வேகமாக கற்றுக்கொண்டதால், தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை வேகமாக பரப்பினார்.
- 8). முதல் ஞானஸ்நானம்: தரங்கம்பாடியில் இருந்த உயர்சாதி இந்து பூசாரிகளின் எதிர்ப்பையும், டேனிஷ் அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி, நற்செய்தியை அறிவித்து, கோட்டைக்கு வெளியே ஓலையினால் பந்தல் அமைத்து ஒரு சிறிய சபையை உருவாக்கினார்கள். அதில் 30 வயதான சூத்திர இனத்தை சேர்ந்த பெருமாள் என்பவருக்கு 1707-இல் மே மாதம் 12-ஆம் தேதி அன்று ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. பின்னர் அடுத்த மாதத்தில் ஒன்பது பேர் ஞானஸ்நானம் பெற்றுகொண்டார்கள்.
- 9). முதல் ஆலயம்: சீகன்பால்க் நற்செய்திபணி மூலமாக தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே தரங்கம்பாடியில் 14 மாதங்கள் கடந்த நிலையில் 20 அடி அகலத்திலும் 50 அடி நீளத்திலும் வெள்ளை கற்களினால் ஒரு ஆலயத்தை கட்டி, அதில் இயேசுவின் சிலுவைப் பாடுகளை சித்தரிக்கும் படங்களையும், பிரசங்க பீடத்தையும் வைத்து புதிய எருசலேம் ஆலயம் என்று பெயர் சூட்டினார்கள். அந்த ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் 75 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அதில் தமிழ் மற்றும் போர்த்துகீசிய மொழியில் ஆராதனை நடத்தப்பட்டது. இந்நிலையில் 1711 -ஆம் ஆண்டில் ப்ளூட்சாவ் ஜெர்மனிக்குத் திரும்பிச் சென்றவர் மீண்டும் தரங்கம்பாடி திரும்பிவரவில்லை.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் சீகன்பால்க் (1683-1719)

- *<u>10). தமிழ் புலமை:</u> சீகன்பால்க் தமிழ்மொழியை கற்றுக் கொள்வதற்கு, உயர் சாதி இந்துக்களிடம் இருந்த பனை ஒலையில் எழுதப்பட்டிருந்த தமிழ்ச்சுவடிகளை கொடுப்பதற்கு மறுத்தார்கள். ஆயினும் பிராமண விதவைகள், தங்கள் கணவன்மார்கள் வைத்திருந்த ஒலைச்சுவடிகளை இரகசியமாக கொடுத்து உதவினார்கள். சீகன்பால்க் தமிழ் ஒலைச்சுவடிகளை தேடியலைந்து சுமார் 300 கையெழுத்துப் பிரதிகளை சேகரித்து அதன்மூலம் தமிழ்மொழியை நன்கு கற்று புலமை பெற்றார்.*
- *<u>11) கல்விப் பணி:</u> தமிழ் மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதற்கு கல்விப்பணி முக்கிய அங்கமாக இருந்தது. ஆசியாவில் முதன்முறையாக தரங்கம்பாடியில் 1707- ஆம் ஆண்டில் பெண்பிள்ளைகளுக்காக சீகன்பால்க் நிறுவினார். இந்தபள்ளியில் முதலில் போர்த்துகீசிய-தமிழ் கலப்பு குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு போர்த்துகீசிய மொழியிலும், தமிழ் குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு தமிழிலும் மேற்கத்திய கணிதம், அறிவியல் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இது சமூக மேம்பாட்டி ற்கும், சமுதாய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.*
- *<u>12). நற்செய்திபணிக்கு அச்சுறுத்தல்:</u> ரோமன் கத்தோலிக்க மிஷனெரிகள் தஞ்சாவூர் இராஜியம் என்னும் பகுதியில் நற்செய்திபணி செய்ய அனுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் சீகன்பால்க் 1709- இல் தஞ்சைக்குச் செல்ல முயன்றார், ஆனால் மன்னர் அல்லது அவரது உயர் அதிகாரிகளின் அனுமதி பெறாவிட்டால் எந்தவொரு ஐரோப்பியரும் பிரயாணம் செய்ய முடியாது. இதையும்மீறி சென்ற பல ரோமன் கத்தோலிக்க போர்த்துகீசிய மிஷனெரிகள் கொல்லப்பட்டுள்ளதையும், பலர் சிறையில் இருப்பதையும் அறிந்துகொண்டார். இப்படி நற்செய்திபணி அறிவிப்பதற்கு கடும் எதிர்ப்புகள் இருந்தது.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் சீகன்பால்க் (1683-1719)




Genealogy of the South-Indian Gods A Manual of the Mythology and Religion

Bartholomaeus Ziegenbalg, Wilhelm Germann, G. J. Metzger

Pages: 254 (English)

- *13).சமய நல்லிணக்கம்:* சீகன்பால்க் கிறிஸ்தவத்தை பரப்புவதற்காக, இந்து மற்றும் முஸ்லீம் மத தலைவர்களுடன் நல்ல உரையாடலை மேற்கொண்டு, சமூகத்தில் நன்மதிப்பை பெற்றார். சீகன்பால்க் 1708-ம் ஆண்டு மற்றும் 1709- ஆம் ஆண்டுகளில் நாகப்பட்டினத்தில் இருந்த டச்சுக்காரர்களை பார்வையிட சென்ற பயணத்தின்போது எதிர்பட்ட இந்து பிராமணர்களை சந்தித்து, நட்புறவு ஏற்படுத்திக்கொண்டார். பொதுமக்கள் கூடும் இடத்தில், சத்திரங்களில், சந்தை வெளிகளில், தனியார் வீடுகளில், இந்து கோயில்கள் மற்றும் மசூதிகளில் இருக்கும் இடங்களில் சென்று, அவர்களின் விழாக்களில் பங்குபெற்று, கலந்துரையாடினார். அப்படியே தரங்கம்பாடியில் புதிய எருசலேம் ஆலயத்திற்கு இந்துக்களையும், முஸ்லீம்களையும் வரவழைத்தார். இந்த சூழ்நிலையில் சீர்திருத்த கிறிஸ்தவம் எல்லா இடங்களிலும் பரவ ஆரம்பித்தது.
- *14). ஆங்கிலேயர்களுடன் நட்புறவு:* சென்னையில் இருந்து வர்த்தகம் செய்த ஆங்கிலேயர்களின் அழைப்பின்பேரில் சீகன்பால்க் 1711 -ம் ஆண்டு மார்ச் 21-ம் தேதி அன்று சென்னைக்கு சென்றார். அப்போது தமிழ் மொழியில் புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு முடிந்துவிட்டதாக சீகன்பால்க் தெரிவித்தார். இது ஒரு புதையல், ஏனெனில் இது இந்தியாவிலிருந்த மற்ற அனைத்து பொக்கீஷங்களையும் மிஞ்சிவிட்டது. இந்நிலையில் இங்கிலாந்தில் இருந்த Society for Promoting Christian Knowledge (SPCK) மிஷனெரி ஸ்தாபனம், தரங்கம்பாடி லூத்தரன் மிஷனெரியான சீகன்பால்க் மொழிபெயர்த்த புதிய ஏற்பாட்டை அச்சிடுவதற்கான அச்சு இயந்திரத்தை வாங்கி கொடுக்க முன்வந்தது. இப்படியாக ஜெர்மனியில் இருந்து 1713 -இல் இந்தியாவுக்கு அச்சு இயந்திரம் தரங்கம்பாடிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்: சீகன்பால்க் (1683-1719)



• *<u>15). சீகன்பால்கின் ஊழியம்</u>: 1712 -ஆம் ஆண்டில், ஆங்கிலேய மிஷனெரி ஸ்தாபனத்தின் மூலம் வழங்கப்பட்ட அச்சு இயந்திரத்தைக் கொண்டு, இந்திய மொழிகளில் முதன்முறையாக தமிழில் அப்போதைய பேச்சுவழக்கு மொழியில் 1714 -இல் வேதாகமத்தை அச்சிட்டு, பின்னர் ஜெர்மானியம், போர்த்துகீசியம் மொழிகளிலும், கிறிஸ்தவ இலக்கியங்களை அச்சிட்டார். மேலும் மார்டின் லூத்தர் எழுதிய ஞான உபதேசங்கள், தமிழ் பாமாலைகள் மற்றும் ஆராதனை இலக்கியங்களையும் தமிழில் அச்சிட்டார். பள்ளி குழந்தைகளுக்காக வேதாகமத்தோடு, தமிழ் நீதி நூல்கள், கணிதம், அறிவியல், மற்றும் புவியியல் பாடங்களை கற்றுக்கொடுத்து கிறிஸ்தவத்தை பரப்பினார்.*

• *<u>16). இலக்கிய படைப்புகள்</u>: சீகன்பால்க் தமிழ் இலக்கணத்தைத் தொகுத்து, இந்திய தத்துவங்களையும் (Indian Philosophy), இந்து மதம் மற்றும் சமூகத்தில் நிலவிவந்த சாதிய அமைப்பையும் எழுதினார். இதில் பிரபலமான புத்தகம் The Genealogy of the Deities of Malabar (மலபார் தெய்வங்களின் பரம்பரை) ஆகும்.*

• *<u>17). பல்வேறு சாதனைகள்</u>: சீகன்பால்க் 1714- இல், ஜெர்மனி சென்று, ஹாலே பல்கலைக்கழகத்தில் (Halle University) தமிழ் மொழியில் ஆய்வு படிப்பைத் தொடங்க உறுதுணையாக இருந்தார். ஆகஸ்ட் 1716- இல், சீகன்பால்க், Maria Salzmann என்ற பெண்ணை திருமணம் செய்து மீண்டும் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். திருச்சபை ஊழியர்களை உருவாக்குவதற்காக 1716 இல் எட்டு மாணவர்களுடன் வேதாகம கல்லூரியை நிறுவினார். பின்னர் பழைய ஏற்பாட்டை தமிழில் மொழியாக்கம் செய்ய ஆரம்பித்து ரூத் என்ற புத்தகத்தை முடித்திருக்கும் வேளையில் ஆஸ்துமா நோயினால் சீகன்பால்கின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. மேலும் தமிழ்நாட்டின் சீரற்ற சீதோஷனநிலை சீகன்பால்கின் சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் சீகன்பால்க் *(1683-1719)*

- *<u>18). தரங்கம்பாடியின் முதல் முத்து</u>: ஆங்கிலேய கிழக்கிந்திய அதிகாரிகளின் வேண்டுகோளின்படி சீகன்பால்க் கடலூரில் 1717 -இல் ஒரு பாடசாலை நிறுவி, சவரிமுத்து என்ற ஆசிரியரை நியமிதிதார். இவர் மாணவர்களுக்கு மேற்கத்திய கல்வியை கற்று கொடுத்ததோடு வேதாகமத்தையும் கற்றுக் கொடுத்ததால் ஆறுமுகப்பிள்ளை என்ற மாணவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். இவருக்கு இஸ்ரவேலரின் முதல் ஆசாரியரான ஆரோன் நினைவாக 1718 -ல் அவருக்கு ஆரோன் என்று ஞானஸ்நானம் கொடுத்து, தரங்கம்பாடி பாடசாலைக்கு ஆசிரியராகவும், உபதேசியாராகவும் நியமித்தார். பிற்காலத்தில் இந்தியாவின் முதல் சீர்திருத்த திருச்சபை குருவானவராக ஆரோன் அருட்பொழிவு செய்யப்பட்டார்.*
- *<u>19). கிறிஸ்துவுக்குள் இளைப்பாறுதல்</u>: சீகன்பால்க் ஒருபோதும் ஆரோக்கியமான மனிதராக இருந்ததில்லை. தன்னுடைய முடிவை உணர்ந்துக் கொண்ட சீகன்பால்க், 1719-ம் ஆண்டு பிப்ரவரி 10 -ம் தேதி அன்று தனது சக ஊழியரான கிரண்ட்லரிடம் (J.E.Grundler) அனைத்துப் பொறுப்பையும் ஒப்படைத்து, 1719-ம் ஆண்டு பிப்ரவரி 23 ஆம் தேதி சீகன்பால்க் தனது 36 -ம் வயதில் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார். சீகன்பால்க் இறந்தபோது, அவரது மனைவி மரியா மற்றும் இரண்டு குழந்தைகளையும், 250 தமிழ் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு திருச்சபையையும் விட்டுச்சென்றார். சீகன்பால்கின் மரணத்திற்குப்பின் மூன்று லூத்தரன் மிஷெனரிகள் பெஞ்சமின் ஷால்ட்ஜ் (Benjamin Schultze), N.D. Dal மற்றும் J.H. Kistenmachet ஆகியோர் 1719 மார்ச் 20-ம் தேதி ஜெர்மனியிலிருந்து தரங்கம்பாடி வந்தார்கள். சீகன்பால்கின் நினைவாக, இந்திய தபால் துறை 2006-ம் ஆண்டு டிசம்பர் 10 -ம் தேதி அன்று ஒரு சிறப்பு அஞ்சல்தலையை வெளியிட்டது.*

SPCK ஆங்கிலேய மிஷன் & தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்

- *<u>SPCK ஆங்கிலேய மிஷன்</u>: கிறிஸ்தவர்களிடைய வேதாகம அறிவை ஊக்குவிப்பதற்காக Society for Promoting Christian Knowledge (SPCK) சங்கம் 1698- இல் லண்டனில் நிறுவப்பட்டது. இந்த தொண்டு நிறுவனமானது உலகில் உள்ள எல்லோரும் கிறிஸ்தவ போதனைகளால் மறுரூபமாக்கப்படவேண்டும் என்பதாகும். இதில் ஆங்கிலிகன் மற்றும் லூத்தரன் திருச்சபை நண்பர்கள், தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் நடந்த மிஷனரிகளின் பணிகளை ஆதரிக்க இணைந்து முன்வந்தார்கள்.*
- *<u>2). கிறிஸ்துவில் லூத்தரன் மற்றும் ஆங்கிலிகன் ஐக்கியம்</u>: 1710 இல் சென்னையில் SPCK யை சேர்ந்த ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள், லூத்தரன் மிஷனெரிகளான சீகன்பால்குவையும் அவரது நண்பருமான J.E.Grundler (1677-1720) ஆகியோரை சென்னைக்கு அழைத்து, தரங்கம்பாடி மிஷனெரி பணித்தளத்திற்கு உதவுவதாக உறுதியளித்தனர், இதனால் ஆங்கிலேய மிஷன் (English Mission) உதயமானது.*
- *<u>3). ஆங்கிலேய மிஷன் (English Mission)</u>: SPCK சங்கத்தின் மூலமாக கிபி 1713 - ம் ஆண்டு சீகன்பால்க்குவிற்கு அச்சு இயந்திரத்தை அனுப்பிவைத்தார்கள். அப்படியே 1726- ஆம் ஆண்டில், தரங்கம்பாடியில் ஜெர்மனியின் லூத்தரன் மிஷனெரிகளில் சிறந்தவரான பெஞ்சமின் ஷால்ட்ஸை (Benjamin SShultz) என்பவரை, தனது மிஷனெரியாக ஏற்றுக்கொள்ள SPCK முன்வந்தது. இதிலிருந்து சுமார் 100 ஆண்டுகளாக ஆங்கிலேய SPCK தொண்டு நிறுவனம், லூத்தரன் மிஷனரிகளில் பலரை தங்கள் மிஷனெரிகளைப்போல ஏற்றுக்கொண்டார்கள். எப்படியெனில், இந்த காலகட்டத்தில் எந்த ஒரு ஆங்கிலேயரும் மிஷனெரிகளாக இந்தியா வருவதற்கு, எல்லாச் சோதனைகளையும், தனிமையையும் எதிர்கொண்டு, தங்கள் வீடு மற்றும் நாட்டை விட்டு வெளியேறத் தயாராக இல்லை.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்:- பெஞ்சமின் சூல்ட்ஸ் (1726-1741)



1). பெஞ்சமின் சூல்ட்ஸ் (Benjamin Schultze): இவர் சிறந்த மொழியியல் வல்லுநர், பல மொழிகளை கற்றறிந்தவர். இவர் போர்த்துகீசிய பிள்ளைகளுக்கும், தமிழ் பிள்ளைகளுக்கும் பாடசாலைகளை மேற்கத்திய பாடங்களோடு வேதாகமத்தையும் கற்றுக்கொடுத்தார். சூல்ட்ஸ் தமிழ் மொழியில் தேர்ச்சிபெற்ற பீட்டர் மாலியப்பனுடன் (Peter Maleiappen 1700-1739), இணைந்து சீகன்பால்க் விட்டுச்சென்ற பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பை ரூத் முதல் மல்கியா வரைக்கும் மொழிபெயர்த்து 1728- இல் அச்சிட்டு வெளியிட்டார். தெலுங்கு மற்றும் இந்தி அல்லது இந்துஸ்தானி மொழியிலும் வேதாகமத்தின் பதிப்புகளை வெளியிட்டார். இந்நிலையில் 1732- ஆம் ஆண்டில் சூல்ட்ஸ் 112 ஜெர்மன் பாமாலை பாடல்களை தமிழில் வெளியிட்டார். இவருடைய நற்செய்திபணியினால், ஒரு வருடத்தில் 600 க்கும் அதிகமானோருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

- *ஆங்கிலேய மிஷன் (English Mission):* பெஞ்சமின் சூல்ட்ஸ் ஏழு ஆண்டுகள் பணியாற்றி கிபி 1726 -இல் லூத்தரன் மிஷனெரி சங்கத்திலிருந்து ஆங்கிலேய மிஷனெரி சங்கத்தில் இணைந்த முதல் மிஷனெரி ஆவார். சென்னையில் The Book of Common Prayer என்ற புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்து 100 க்கும் அதிகமான கிராமங்களில் கிறிஸ்தவத்தை பரப்பினார். இங்கு தமிழ் மற்றும் தெலுங்கு, ஹிந்துஸ்தானி மொழிகளை பேசும் கிறிஸ்தவர்களுக்கு திருச்சபைகளையும், பாடசாலையையும் நிறுவினார். இதில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர்களே கிறிஸ்தவர் களானார்கள். கிபி 1741 அறிக்கையின்படி 678 பேர் இந்தியர், மற்றும் 13 பேர் போர்த்துகீசியர்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். 1741- ம் ஆண்டு சூல்ட்ஸ் ஜெர்மனிக்கு திரும்பி சென்றதினால் பிலிப் பெப்ரீசியஸ் என்ற லூத்தரன் மிஷனெரி ஆங்கிலேய மிஷனெரி சங்கத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்: பிலிப் ஃபெப்ரீசியஸ் (1740-1791)





- *<u>1).பிலிப் ஃபெப்ரீசியஸ் (Phillip Fabricius)</u>: இவர் மிகத் திறமையான மொழியியல் வல்லுநர், திருமணம் செய்யாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்து நற்செய்திபணி அறிவித்து வந்ததினால் சந்நியாசி ஐயர் என்று செல்லமாய் அழைக்கப்பட்டார். சென்னைக்கு வந்த ஃபெப்ரீசியஸ், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகளுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டதால் பல்வேறு வகைகளில் உதவினார்கள்.*

- *<u>2). போராட்ட காலங்கள்(1745-1784)</u>: ஃபெப்ரீசியஸ் போல எந்த ஒரு மிஷனெரியும் கஷ்டங்களை அனுபவித்திருக்க மாட்டார்கள். ஆங்கிலேயர்களுக்கு எதிராக சுமார் 40 ஆண்டுகள் தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களும் மைசூர் மகாராஜா ஹைதர் அலியும் மிகக்கடுமையாக யுத்தம் செய்ததால் அடிக்கடி அகதியைப்போல வேறு இடங்களுக்கு தஞ்சம் அடைய வேண்டியிருந்தது. கிபி 1746 -இல் சென்னையை பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியபோது அண்டை பகுதியில் இருந்த டச்சுக்காரர்களின் கோட்டையான புலிக்காடு (சென்னை, பழவேற்காடு) பகுதிக்கு உயிர்தப்ப ஓடவேண்டியதாயிற்று. பின்னர் 1749- இல் திரும்பி வந்து நற்செய்திபணி செய்துகொண்டு இருந்தார். 1758- இல் பிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் சென்னையை கைப்பற்றியபோது இரண்டாவது முறையாக புலிகாட்டுக்கு ஓடி 1765- இல் மீண்டும் திரும்பி வந்தார். 1780 -இல் மைசூர் மன்னர் ஹைதர் அலி சென்னையை கைப்பற்றி பெருத்த சேதத்தை ஏற்படுத்தியதால், அச்சத்தின் காரணமாக மீண்டும் புலிக்காட்டு (பழவேற்காடு) கோட்டையில் தஞ்சம் அடையவேண்டியதாயிற்று. இத்தகைய கடுமையான கால கட்டங்களிலும் ஃபெப்ரீசியஸ் மனம் தளராமல், தாயகத்திற்கு திரும்பிச்செல்லாமல் சென்னை புறநகர் பகுதிகளில் கிறிஸ்தவத்தை பரப்பி, நூற்றுக்கணக்கானோருக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்தவத்தை பரப்பினார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் பிலிப் ஃபெப்ரீசியஸ் (1742-1791)

முகவுரை.

பப்ரீஷியஸின் புதியேற்பாட்டு முகவுரை—1772
(Preface to the New Testament of Fabricius)

<u>3). வேதாகம மொழிபெயர்ப்பு:</u> தமிழ்மொழியில் வெளியிடப்பட்ட சீகன்பால்கின் புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாட்டின் ரூத் வரை வருகின்ற மொழியாக்கங்களும், பெஞ்சமின் சூல்ட்ஸ் அவர்களின் ரூத் முதல் மல்கியா வரை வருகின்ற மொழிபெயர்ப்பில் தமிழ் மொழி நடையிலும், இலக்கண ரீதியாகவும் பல குறைபாடுகள் இருப்பதை ஃபெப்ரீசியஸ் கண்டறிந்தார். ஆகவே இதற்காக தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தி, முழங்காலில் நின்றவாறே தன்னை ஒரு ஏழைப்பாவியாக கருதி, ஒவ்வொரு வார்த்தையையும் நன்கு ஆராய்ந்து, பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் மொழி பெயர்த்தார். இதை அநேகருக்கு சத்தமாக வாசித்துக் காண்பித்து, தரமான வேதாகம மொழிபெயர்ப்பை செய்துமுடித்தார்.

- *<u>4). தங்க வேதாகமம் (Golden Bible)</u>:* ஃபெப்ரீசியஸ் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியில் சிறந்த வேதாகமம் தேவை என்ற ஏக்கம் அனைவர் மனதிலும் இருந்தது. மக்கள் ஃபெப்ரீசியசிடம் எங்களுக்கு நீங்கள் கொடுக்கும் உணவு பொருட்கள் அல்லது பணம் தேவையில்லை, ஆனால் நாங்கள் கடவுளைப்பற்றி அறிந்து கொள்வதற்கு இந்துமத உயர்சாதியினர் வைத்திருக்கும் வேதங்களைப் போல எங்களுக்கும் வேதாகமத்தை தாருங்கள் என்று மக்கள் அழுதபடி அவரைப் பின்தொடர்ந்தார்கள். ஆகவே ஃபெப்ரீசியஸ் சுமார் 24 ஆண்டுகள் கடினமாக உழைத்து, கிபி 1761-ம் ஆண்டு புதிய ஏற்பாட்டை அச்சடித்து வெளியிட்டார். இதன் பின்னர் பழைய ஏற்பாட்டை மொழிபெயர்க்க ஆரம்பித்து, அதனையும் கிபி 1766 -ம் ஆண்டு மொழிபெயர்த்து முடித்தார். ஆனால் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் சேர்ந்து ஒரே வேதபுத்தகமாக கிபி 1796 -ம் ஆண்டு தான் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இது Golden Bible அல்லது வேதாகம பொக்கீஷம் என்று அழைக்கப்பட்டது. இந்த வேதாகமம் லூத்தரன் திருச்சபையில் சுமார் 150 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
பிலிப் ஃபெப்ரீசியஸ் *(1742-1791)*







- <u>5). பாமாலை வெளியீடு</u>: ஃபெப்ரீசியஸ் ஜெர்மானிய மொழியில் பாடப்பட்டு வந்த பாமாலை பாடல்களை தமிழில் மொழிபெயர்த்தார். இதுவரை சீகன்பால்க் மற்றும் பெஞ்சமின் சூல்ட்ஸ் அவர்களும் மொழிபெயர்த்திருந்த பாடல்களோடு, தான் மொழிபெயர்த்த பாடல்களையும் சேர்த்து நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களோடு, கிபி *1774*- ஆம் ஆண்டு ஒரே புத்தகமாக வெளியிட்டார். இவருடைய எளிய மொழிபெயர்ப்பு பாடல்கள், இறையியல் கருத்து செரிந்ததாகவும் பாடுவோரின் மனதில் ஆழமான உணர்வுகளையும் வெளிப்படுத்தி, கிறிஸ்தவ பக்தியில் வளருவதற்கு மிகவும் உதவியாய் இருந்தது.
- <u>6). சொல் அகராதி வெளியீடு *(Publication of Dictionary)*</u>: சீகன்பால்க் தான் முதன்முதலில் தமிழ் சொற்களை தொகுத்து, அதற்கு நிகரான ஜெர்மானிய சொற்களை உருவாக்கி இருந்தார்.
- ஆனால் ஃபெப்ரீசியஸ் ஒருபடி மேலே சென்று மிஷனெரிகள், தமிழ் மொழியை வேகமாக கற்றுக்கொள்வதற்கு கிபி *1778* இல் தமிழ் இலக்கணத்தை ஜெர்மானிய மொழியிலும், *1779* இல் தமிழ்-ஜெர்மானிய சொல் அகராதியையும் *(Lexicography)*, *1786* இல் ஆங்கிலம் -தமிழ் சொல் அகராதியையும் வெளியிட்டார்.
- <u>7).ஆத்தும அறுவடை</u>: ஆங்கிலேயருக்கு எதிராக பிரெஞ்சு காரர்களும், ஹைதரபாத் அலியும் நடத்திய போர்களில் உயிர்தப்ப, ஓடிச்செல்ல நேரிட்டபோதும் கிறிஸ்தவத்தை பரப்பு வதில் சோர்ந்துபோகவில்லை. சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளான புலிக்காடு (பழவேற்காடு), செங்கல்பட்டு, வேலூர் பகுதிகளில் *50* ஆண்டுகளாக நற்செய்திபணி அறிவித்து *240* பேர் கிறிஸ்தவர்களாக இருந்த நிலையில் இதன் எண்ணிக்கை *4000* பேராக உயர்ந்தது. இந்நிலையில் *1791*-ஆம் ஆண்டு ஜனவரி *23*-ம் தேதி அன்று ஃபெப்ரீசியஸ் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
C.F. Schwartz (1750-1798)



- *C.F. சுவாட்ஸ் (Christian Friedrich Schwartz)*: ஜெர்மனியிலிருந்து லூத்தரன் மிஷனெரியாக தரங்கம்பாடிக்கு 1750 ஜூலை 16-ல் வந்து சேர்ந்தார். இவர் பரிசுத்தமான மனிதர், நேர்மை, நம்பிக்கை மற்றும் நாணயத்திற்கு எடுத்துக்காட்டாய் இருந்தார். இவர் அறிஞராக மட்டுமல்லாமல், பன்மொழி பேசும் திறமையையும், சிறந்த அரசியல் சாணக்கியராகவும் திருநெல்வேலி பகுதியில் சாணார் இனத்தை சேர்ந்த வெகுஜன- மத மாற்ற இயக்கத்திற்கு (Mass- Movements) காரண கர்த்தவாகவும் இருந்தார்.
- 2). தரங்கம்பாடி ஊழியம்: சுவாட்ஸ் தரங்கம்பாடி பகுதியில் இருந்த 1700 கிறிஸ்தவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார். விரைவாகவே தமிழ்மொழியை கற்றுக்கொண்டு, திறமையான ஆசிரியராக இருந்து தரங்கம்பாடியை சுற்றியிருந்த பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பித்து, நற்பெயர் பெற்றார். சுவாட்ஸ் ஐயர் ஏற்கனவே ஜெர்மன், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு போன்ற ஐரோப்பிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். அப்படியே இந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராத்தி, உருது, பாரசீகம், மற்றும் போர்த்துகீசியம் மொழிகளையும் கற்றுக்கொண்டு இந்தியாவில் பலருடைய இதயங்களை வென்றார். சுவாட்ஸ் ஐயர் தரங்கம்பாடியில் பத்து ஆண்டுகள் பணியாற்றி, 1760 இல் பால்க் ஜலசந்தியைக் கடந்து யாழ்பாணத்தில் இருந்த டச்சுக்காரர்கள் காலனியின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் கிராமங்களுக்கு பயணம் செய்து இரண்டு ஆண்டுகள் கிறிஸ்தவத்தை பரப்பினார். பின்னர் 1762 -ம் ஆண்டு திருச்சிக்கு சென்ற இடத்தில் அங்கிருந்த ஆங்கிலேய இராணுவ தளபதி பிரஸ்டன்(Preston), ஆங்கிலேய இராணுவவீரர்கள் மத்தியில் ஊழியம்செய்யும்படி வருந்தி கேட்டுக்கொண்டார். ஆகவே சுவாட்ஸ் ஐயர், தரங்கம்பாடியை விட்டுவிட்டு திருச்சி வந்து சேர்ந்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் • *C.F. Schwartz (1750-98)*

<u>திருச்சியில் ஊழியம்</u>: போரின்போது மரணமடைந்த ஆங்கிலேய வீரர்களை அடக்கம் செய்ய, காயமடைந்தவர்களை ஆறுதல் படுத்த இராணுவ குருவானவர் *(Military Chaplain)* இல்லாத்தல் ஸ்வார்ட்ஸ் ஐயரை தங்களோடு திருச்சியில் தங்கியிருக்க ஆங்கிலேய இராணுவ தளபதி பிரஸ்டன் *(Preston)* கெஞ்சி கேட்டுக் கொண்டார். *1763* இல் திருச்சி கோட்டையின் வெடிகுண்டு கிடங்கு வெடித்து சிதறியதால் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். சுவாட்ஸ் ஐயர் லூத்தரன் திருச்சபையை சேர்ந்தவராக இருந்தாலும், நல்லமுறையில் அடக்க ஆராதனைகளை நடத்திக்கொடுத்தார். *1764*-ஆம் ஆண்டில், ஆங்கிலேய துருப்புக்கள் மதுரையை முற்றுகையிட அணிவகுத்து சென்றபோது பிரஸ்டன் மீண்டும் உதவுமாறு ஸ்வார்ட்ஸிடம் கெஞ்சினார். போர்களில், அநேக ஆங்கிலேய வீரர்கள் மரித்துப்போனதினால் பல குழந்தைகள் தந்தையற்றவர்களானார்கள். ஆகவே திருச்சியில் பிரஸ்டனின் உதவியால், அனாதை பிள்ளைகளுக்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் ஒரு பாடசாலையை சுவாட்ஸ் நிறுவி, *1500* பேர் அமரக்கூடிய ஆலயத்தை கட்டி *Christ Church* என்று பெயரிட்டு *1766* மே மாதம் *18*-ம் தேதி அன்று பிரதிஷ்டை செய்தார்.

<u>*4).*முஸ்லீம்கள் மத்தியில் நற்செய்திபணி</u>: கிபி *1767* இல் சுவார்ட்ஸ் ஆங்கிலேய இராணுவ குருவானவராக *(Military Chaplin)* நியமிக்கப்பட்டார். திருச்சியை ஆண்டுவந்த ஆற்காடு நவாப் பிரதிநிதிகளுடன் பேசுவதற்காக உருது மொழியைக் சுவார்ட்ஸ் கற்றுக்கொண்டார். மேலும் திருச்சியில் *16* ஆண்டுகள் இந்துக்கள், முகமதியர்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை பரப்பியதில் அநேகர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இங்கு உபதேசியார்களை நியமித்து, பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகவும் நியமித்தார். *1772* இல் தஞ்சையை ஆண்டுகொண்டிருந்த மராட்டிய மன்னர் துளசி, சுவாட்ஸ் ஐயரை தஞ்சாவூருக்கு வரும்படி வருந்தியழைத்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்

C.F. Schwartz (1750-1798)

- *<u>தஞ்சாவூர் ஊழியம்</u>: 1773 இல் தஞ்சாவூரில் மராட்டிய மன்னர் துளசிக்கு எதிராக ஆற்காடு நவாப் முற்றுகையிட்டு, அழித்ததில் பலத்த பொருட்சேதம் உண்டாயிற்று. பஞ்சம், கொள்ளை நோயின் காரணமாக ஆயிரக்கணக்கானோர் தானியத்தையும் பெறமுடியாமல் பட்டினியால் செத்துக்கொண்டிருந்தபோது சுவாட்ஸ் ஐயர் ஆங்கிலேயர் உதவியுடன் சாதி, மத பேதமின்றி, நிவாரண முயற்சிகளை மேற்கொண்டு, மக்களின் கடன் சுமைகளை குறைக்கவும், பொருட்களின் விலைகளை கட்டுப் பாட்டிற்குள்ளும் வைத்துக்கொண்டார். இது நன்மதிப்பையும் அனைவரிடமிருந்து பெற்று தந்தது. 1776 -ம் ஆண்டு மன்னரான துளசி, சுவாட்ஸ் ஐயரை நிரந்தரமாக இருக்குமாறு கெஞ்சினார்.*
- *<u>6). திருச்சபை தலைமைத்துவம்</u>: ஸ்வார்ட்ஸ் ஐயர் தஞ்சாவூர் பகுதிகளில் கிறிஸ்தவத்தை பரப்பியதில் உயர்சாதியை சேர்ந்த வெள்ளாளர் அதிகமானோர் கிறிஸ்தவர்களானர்கள். அங்கு தமிழ் பாடசாலையின் ஆசிரியர்களாக ஆரோன், சந்தியாகு மற்றும் ராஜநாயகம் ஆகியோரை, உபதேசியார்களாய் நியமித்தார். இந்நிலையில் ஸ்வாட்ஸ் ஐயர் தஞ்சாவூரில் 1779-ம் ஆண்டு, Christ Church என்ற பெயரில் பெரிய ஆலயத்தை கட்டி பிரதிஷ்டை செய்தார். அப்படியே ஆங்காங்கே பாடசாலை களையும் நிறுவினார். இந்நிலையில் வேதநாயகம் சாஸ்திரியார் குடும்பம் சுவாட்ஸ் ஐயர் மூலமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார்கள். வேதநாயகம் சாஸ்திரியார் மிகச் சிறந்த தமிழ் கவிஞர் ஆவார். இவர் எழுதிய பக்திப்பாடல்கள் இன்றும் திருச்சபைகளில் பாடப்பட்டு வருகிறது. 1784 -ஆம் ஆண்டில் சுவாட்ஸ் ஐயர் ஆங்கிலவழி கல்விமுறையில் தஞ்சாவூரில் புனித பீட்டர் மேல்நிலைப்பள்ளியை நிறுவினார். இப்படி சுவாட்ஸ் ஐயர் தன்னுடைய வாழ்வின் 28 ஆண்டுகளை தஞ்சாவூரிலேயே தங்கியிருந்து கிறிஸ்தவத்தை பரப்பிக்கொண்டு இருந்தார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
C.F. ஸ்வார்ட்ஸ் (1750-1798)



- *7). இராஜகுரு:* தஞ்சாவூரில் ஸ்வார்ட்ஸ் பெர்சிய மொழியைக் கற்றுக்கொண்டு, மன்னருக்கும் ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். 1787 இல் மராட்டிய மன்னர் துளசி, மரண படுக்கையில் இருக்கும்போது, ஆண்வாரிசு இல்லாததினால் பத்து வயதான சகோதரியின் மகன் இரண்டாம் சரபோஜியை *(Serfoji II)* தத்தெடுத்துக்கொண்டு, சுவாட்ஸ் ஐயரை அந்த சிறுவனின் பொறுப்பாளராக *(Guardian)* இருக்கும்படி கெஞ்சினார், ஆனால் ஸ்வார்ட்ஸ் மறுத்துவிடவே ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அமீர் சிங் என்பவரை மன்னராக நியமித்தார்கள். இந்நிலையில் அமீர் சிங்கின் ஊழியர்கள் சிறுவனுக்கு அரச கல்வியையும், பாதுகாப்பையும் கொடுக்காமல் மன்னனின் உத்தரவின் பேரில் அடைத்து வைத்தார்கள். சிறுவனின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதை யறிந்த சுவாட்ஸ் ஆங்கிலேய அதிகாரிகளிடம் முறையிட்டதால், அமர்சிங்கை நீக்கிவிட்டு ஸ்வார்ட்ஸ் ஐயரை சிறுவனின் இராஜகுருவாக நியமித்தார்கள். ஆனால் 1793 -ஆம் ஆண்டில், அமீர் சிங்கின் ஊழியர்கள் மீண்டும் இரண்டாம் சரபோஜியை கொல்ல முயற்சிகளை செய்ததினால் மீண்டும் ஆங்கிலேய அதிகாரிகளிடம் சுவாட்ஸ் முறையிட்டதால் 1797 இல் இரண்டாம் சரபோஜியை தஞ்சாவூர் சிம்மாசனத்திற்கு மன்னராக்கினார்கள். ஸ்வார்ட்ஸ் ஐயர், சரபோஜியை தனது மாணவராக கருதாமல், ஒரு நண்பராகவே பழகினார். ஆனால் இளம் இளவரசர் ஸ்வார்ட்ஸ் ஐயரை தனது வாழ்க்கையை மீட்டெடுத்தவராகவும், தந்தையாகவும் கருதினார். இப்படியாக சுவாட்ஸ் ஐயர், தஞ்சாவூர் மராத்திய மன்னரின் அரண்மனையில் சிறந்த இராஜகுருவாக இருந்ததோடு, இராமநாதபுரம் மன்னருக்கும், மற்றும் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகளுக்கும் நெருக்கமானவராக இருந்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
C.F. ஸ்வார்ட்ஸ் (1750-1798)

- *11). ராமநாதபுரத்தில் ஊழியம்:* சென்னை ஆங்கிலேய ஆளுநராக இருந்த *Lord George McCartney* தஞ்சாவூரில் ஆங்கிலேயபடை தளபதியாக *John Sullivan* மூலமாக ராமநாதபுர மன்னராக இருந்த முத்துராமலிங்க சேதுபதியின் (1760-1794) குறைகளை கேட்டறிய சுவாட்ஸ் ஐயரை அழைத்துச்செல்ல கூறினார்கள். இராமநாத புரத்தில் அரசகுடும்பத்தின் பிள்ளைகள் ஆங்கிலவழியில் கல்விகற்க ஒரு பாடசாலையை ஆரம்பிக்க, சேதுபதி மன்னர் உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதை சேதுபதி ஏற்றுக் கொண்டதினால் சுவாட்ஸ் ஐயர் மூலமாக ராமநாதபுரத்தில் 1785-ம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. இதில் மேற்கத்திய பாடங்களோடு வேதாகமத்தையும் கற்று கொடுத்தார்கள். 1792 -ம் ஆண்டு சிவகங்கை, கும்பகோணம் பகுதிகளிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, நற்செய்திபணி அறிவித்ததால் கிறிஸ்தவம் பரவியது. சுவாட்ஸ் ஐயரால் ராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்ட மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில்தான் ஏவுகணை மனிதர் என்று அழைக்கப்பட்ட இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி A.P.J. அப்துல் கலாம் கல்வி கற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.
- *12). ஆத்தும அறுவடை:* சுவாட்ஸ் ஐயர் ராமநாதபுரத்தில் லூத்தரன் மிஷனெரி ஸ்தாபனத்தின் நிறுவனர் ஆவார். இவர் தஞ்சாவூரில் ஊழிய பயிற்சி கொடுத்த உபதேசியார்களை ராமநாதபுரத்திற்கு அனுப்பி கிறிஸ்தவத்தை பரவ செய்து, ஆங்காங்கே ஆலயங்களையும், பாடசாலைகளையும் ஆரம்பித்து சாதி, மத பேதம் இல்லாமல் சுவாட்ஸ் ஐயர் அவர்கள் அடிப்படை கல்வியறிவு பெறச்செய்தார். இந்நிலையில் ராமநாதபுர பகுதிகளில் மறவர் இனத்தைச் சேர்ந்த கள்ளர் சமூகத்தில் சுமார் 2800-க்கும் அதிகமானோர் கிறிஸ்தவர்களாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதால் கிறிஸ்தவம் வேகமாக பரவியது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
C.F.Schwartz (1750-1798)



- *8). அரசியல் சாணக்கியர்: சுவாட்ஸ் 1779 இல் ஆங்கிலேய தளபதி தஞ்சாவூரில் இருந்து சென்னைக்குவர கேட்டுக் கொண்டார். அங்கு ஆங்கிலேய படைகளுக்கு ஆபத்தாக இருக்கும் மராத்திய படைக்கும், மைசூர் மன்னர் ஹைதர் அலிக்கும் இடையே ரகசியமான சமாதானப் பணியை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்கள். ஏனெனில் ஹைதர் அலி, ஆங்கிலேயரின் எதிரியான பிரெஞ்சுக்காரர்களுடன் கைகோர்த்துக்கொண்டு, ஆங்கிலேயருக்கு எதிரான போருக்குத் திட்டமிட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டார்கள்.*

9). சமாதான புறா: ஹைதர் அலியும் சுவாட்ஸ் ஐயரை தவிர வேறு எவரையும் அனுப்ப வேண்டாம் என்று ஆங்கிலேய பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டார். இந்நிலையில் சுவாட்ஸ் ஐயர், தான் ஒரு மிஷனரியாகவும், சமாதான தூதுவராகவும் மட்டுமே செல்வதாகவும் கூறினார். இது இந்து, முஸ்லீம் மற்றும் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு சுவாட்ஸ் ஐயர் மீது நம்பகத்தன்மையையும், மிகுந்த நன்மதிப்பை உருவாக்கியது.

10). அமைதிக்கு குந்தகம்: ஸ்வார்ட்ஸ் ஹைதர் அலியுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு, போரினால் ஏற்படும் உயிர்ச்சேதங்கள், பொருட்சேதங்களை விளக்கியதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, ஹைதர் அலி சமாதானத்தை உறுதி செய்த்தல் சென்னை திரும்பினார். ஆனால் ஆங்கிலேயர்கள், சுவாட்ஸ் ஐயரின் வாக்குறுதியை மீறி ஹைதர் அலிக்கு எதிராக போருக்கு ஆயத்தமானார்கள். ஹைதர் அலியின் படைகள் 1, 00,000 வீரர்களோடு சென்னை நோக்கி வந்து காஞ்சிபுரத்திற்கு அருகிலிருந்த ஆங்கிலேய படைத்தாக்குதல்களை முறியடித்து சென்னையை நோக்கி முன்னேறினார்கள். ஆகவே மீண்டும் அவசரம் அவசரமாக ஆங்கிலேயபடை சுவாட்ஸ் ஐயரை மீண்டும் சமாதான தூதுவராக அனுப்பிவைத்தார்கள்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்

C.F. ஸ்வார்ட்ஸ் (1750-1798)

People of Nadar Caste in Earlier Days

- *<u>13). திருநெல்வேலியில் ஊழியம்</u>:* திருநெல்வேலி பகுதியில் *1769* -ம் ஆண்டிலிருந்து கிறிஸ்தவர்கள் குடியிருக்க ஆரம்பித்தார்கள். எப்படியெனில் தஞ்சாவூர் மற்றும் திருச்சி பகுதிகளில் இருந்த ஆங்கிலேய வீரர்கள் பாளையங் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். *1778* பிப்ரவரியில் பாளையங்கோட்டையில் இராணுவ அதிகாரிக்கு திருமணம் செய்துவைக்கவும், ஆங்கிலேய குழந்தைகளுக்கு ஞானஸ் நானம் கொடுக்கவும் ஸ்வார்ட்ஸ் திருநெல்வேலிக்கு வந்தார்.
- *<u>14) வெகுஜன-மத மாற்றம் (Mass- Conversion)</u>:* சுவாட்ஸ் ஐயரிடம் தஞ்சாவூரில் இருந்து பாளையங்கோட்டை பகுதிக்கு குடியிருக்கவந்த கோகிலா என்ற பிராமண விதவை ஞானஸ்நானம் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த பெண்மணி ஏற்கனவே *1770* இல் தஞ்சாவூரில் சுவாட்ஸ் ஐயர் இருந்தபோது ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள். ஆனால் இவள் ஆங்கிலேயபடை தளபதி *Little Don* என்பவருடன் திருமணம் செய்துகொள்ளாமல் வசித்துவந்ததால் ஸ்வார்ட்ஸ் ஐயர் மறுத்துவிட்டார். இப்போது *Little Don* மரித்துப்போகவே கோகிலா என்ற பெண்ணிற்கு குளோரிந்தாள் என்று *1778* -ம் ஆண்டு ஞானஸ்நானம் கொடுத்தார். பிற்காலத்தில் குளோரிந்தா ஊழியத்தின் மூலமாக அநேகர் கிறிஸ்தவர்களாக மாறியதால், அவளுடைய வேண்டுகோளுக்கு ஏற்ப கறபகம் சத்தியநாதன் பிள்ளை என்பவருக்கு குருத்துவ அருட்பொழிவு கொடுத்து அனுப்பி வைத்தார். *1799* இல் சத்தியநாதனுக்கு உதவியாக தாவீது சுந்தரானந்தம் என்பவரை அனுப்பிவைத்தார். தாவீது மூலமாக திருநெல்வேலி பகுதியில் தாழ்த்தப்பட்ட சாணார் இனத்திலிருந்து வெகுஜன –மத மாற்றத்திற்கான (*Mass-Conversion*) அடித்தளத்தை அமைத்தவர் சுவாட்ஸ் ஐயர் ஆவார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்

C.F. Schwartz (1750-1798)



Christian Frederick Schwartz

1726-1798

Missionary to India

Never Off Duty

- *<u>15).சுவாட்ஸ் ஐயரின் இறுதி நாட்கள்</u>: சுவாட்ஸ் ஐயர் திருமணம் செய்யாமல் ஊழியம் செய்ததால், தன்னுடைய இறுதி நாட்கள் நெருங்குவதை அறிந்து, தனது வளர்ப்பு மகன் John Casper Kohloff என்பவரிடம் பொறுப்பை ஒப்படைத்தார்.*

<u>16).ஜான் காஸ்பர் கோலஃப் (1762-1844)</u>: இவர் தரங்கம்பாடியில் ஊழியம் செய்த ஜெர்மானிய மிஷனெரி John Balthazar Kohloff மகன் ஆவார். J.C. கோலஃப் தமிழ், ஆங்கிலம், போர்த்துகீசியம், ஹிந்துஸ்தானி மற்றும் பெர்சிய மொழிகளில் புலமை பெற்றவராய் இருந்தார். சுவாட்ஸ் ஐயர் 1787 ஜனவரி 23 அன்று John Balthazar Kohloff ஊழியத்தின் ஜூபிலி ஆண்டு (ஐம்பதாம் ஆண்டு) விழாவில் J.C. கோலஃப் அவர்களை போதகராக அருட்பொழிவு செய்தார். J.C. கோல்ஃப் ஐயரும் தஞ்சாவூரில் லூத்தரன் மிஷனில் 47 ஆண்டுகள் ஊழியம் செய்தார்.

<u>17). இமயம் சரிந்தது</u>: சுவாட்ஸ் ஐயர் மரணப் படுக்கையில் இருக்கும்போது தஞ்சாவூர் மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோஜியை அழைத்து மக்கள் எல்லோரையும் அரவணைத்து, நீதியுடன் நல்லாட்சி செய்து, கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பாக இருந்து, நித்திய அமைதியைக் கொடுக்கக்கூடிய கடவுளின் கிருபையிலும், கருணையிலும் அற்பணிப்பதாக கூறி சிறப்பு ஆசீர்வாதத்தை கூறினார். சரபோஜி மன்னரும் கிறிஸ்தவர்களை நன்கு கவனித்துக்கொள்வதாக உறுதியளித்தார். இந்நிலையில் கிறிஸ்டியன் பிரடெரிக் சுவாட்ஸ் அவர்கள் 1798-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி அன்று கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார். அவரது சரீரம் தஞ்சாவூரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஸ்வார்ட்ஸ் ஐயர் அவர்கள் 1750 - ம் ஆண்டு தரங்கம்பாடி வந்ததிலிருந்து இறந்த நாள் வரை ஒருபோதும் தன்னுடைய சொந்த நாடான ஜெர்மனிக்கு திரும்பிச் சென்றதில்லை.

- *<u>18).நினைவுச்சின்னம்</u>:* சுவாட்ஸ் ஐயரின் நினைவு ஆராதனையில் மன்னர் சரபோஜி ஆங்கிலத்தில் புகழஞ்சலி வாசித்து, தஞ்சாவூரில் இருக்கும் *Christ Church* பகுதியில் ஒரு நினைவுச்சின்னத்தையும் வைத்தார். பின்னர், சுவாட்ஸ் ஐயரிடம் கொண்டிருந்த பாசத்தை வெளிப்படுத்த தஞ்சாவூரில் ஒரு ஆலயத்தையும் கட்டிக்கொடுத்தார். இந்நிலையில் *1798* ஆம் ஆண்டு சுவாட்ஸ் ஐயர் இறந்தபோது, ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, அவரை கௌரவிக்கும் படியாக சென்னையில் *St.Mary Church* நினைவு சின்னம் வைத்தார்கள்.

<u>19). தரங்கையின் விடிவெள்ளி நட்சத்திரம்</u>: சுவாட்ஸ் ஐயர் வாழ்ந்த முன்னுதாரமான வாழ்க்கை, ஆயிரக்கணக்கான இந்து, முஸ்லிம், ஆங்கிலேய மக்களை கவர்ந்து இழுத்தது. அவர் ஒரே நபராக நின்று பல மிஷனரிகளின் வேலையைச் செய்தார். அநீதியும், பாகுபாடும் காண்பித்த ஐரோப்பிய மற்றும் இந்திய நாட்டில் சுவாட்ஸ் ஐயர் வாழ்ந்த வாழ்க்கை, ஒருபோதும் கேள்விக்குறியாக ஆக்கப்படவில்லை. தரங்கம்பாடிக்கு வந்த லூத்தரன் மிஷனரிகளில் மிகப் பெரியவர் சுவாட்ஸ் ஐயர் என்பது சந்தேகமில்லை. இவருடைய காலமானது தரங்கம்பாடி லூத்தரன் மிஷனின் பொற்காலம் ஆகும்.

<u>20). ஆத்தும அறுவடை</u>: கிறிஸ்டியன் பிரடெரிக் சுவாட்ஸ் அவர்கள் தமிழ்நாட்டில் ஊழியம் செய்த *48* ஆண்டுகளில் ஆறாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கிறிஸ்துவை ஏற்றுகொண்டார்கள். தமிழ் மக்களின் வாழ்க்கைதரம் மேம்பட பல பாடசாலைகளை ஏற்படுத்தி மக்களின் அறிவுக்கண்களை திறந்தார். இந்திய திருச்சபை வரலாற்றில் சுவாட்ஸ் அவர்களை தென்னிந்தியாவின் அப்போஸ்தலன் என்று அழைத்து பெருமைபடுத்துகிறது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் • ஆரோன் (கி.பி 1698-1745)

ஆரோன்: ஆறுமுகப்பிள்ளை 1698 இல் தமிழ்நாட்டில் பிராமணர்களுக்கு அடுத்த உயர்சாதியான வெள்ளாளர் குடும்பத்தில் பிறந்தார். பாடசாலையில் படிக்கும் காலத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் சீகன்பால்க், இவருக்கு ஆரோன் என்று 1718 -ம் ஆண்டு ஞானஸ்நானம் கொடுத்தார். ஆரோன் தைரியமும், நேர்மையும் கொண்டு, தனிநபர்களைக் கையாள்வதிலும், புத்திசாலியாகவும் இருந்து, இந்து சமூகத்திலும் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆரோன், தரங்கம்பாடி பாடசாலையில் ஆசிரியராகவும், சுற்றியிருக்கும் கிராமங்களில் நற்செய்திபணியையும் அறிவித்து வந்தார்.

குருவானவர் அருட்பொழிவு: தமிழ் திருச்சபைகளை அடுத்தக் கட்ட வளர்ச்சிக்கு கொண்டுச் செல்ல தமிழ் குருவானவர்களை நியமிக்க வேண்டும் என்ற நிலையில் சீகன்பால்க் மூலம் ஆரம்பிக்கப்பட்ட வேதாகம கல்லூரியில் ஆரோனுக்கு வேதாகமத்தை நன்கு கற்றுகொடுத்து 1733-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 தேதி அன்று குருவானவராக அருட்பொழிவு செய்யப்பட்டார். ஐரோப்பிய குருவானவர்களுக்கு சமமான நிலைப்பாட்டைக் கொண்ட முதல் தமிழ் லூத்தரன் மதகுருக்களாக நியமித்தனர். இவர்தான் இந்தியாவில் சீர்திருத்த திருச்சபையின் முதல் குருவானவர் ஆவார். பின்னர் தஞ்சாவூரில் மாயவரத்தில் உள்ள லூத்தரன் திருச்சபையின் போதகராக நியமிக்கப்பட்டார். ஆரோன் 12 ஆண்டுகாலமாக குருவானவராக பணியாற்றி அநேகரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி தஞ்சாவூர் பகுதிகளில் கிறிஸ்தவத்தை எல்லா கிராமங்களிலும் பரவ செய்தார். இதனால் தமிழ் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை கனிசமாக உயர்ந்தது. இந்நிலையில் குருவானவர் ஆரோன் 1745 -ம் ஆண்டு ஜூன் மாதம் 25 தேதி அன்று கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் ராஜநாயக்கன் (1700-1771)



- ராஜநாயக்கன்: இவர் தஞ்சாவூரில் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த செர்வை (Servai) குடும்பத்தில் பிறந்து, ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் ராஜநாயக்கன் என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றிருந்தார். இவர் தஞ்சாவூர் மன்னரின் இராணுவத்தில் துணை அதிகாரியாக பணியாற்றினார். இவர் ரோமன் கத்தோலிக்க திருச்சபையிலிருந்து விலகி, லூத்தரன் திருச்சபையில் இணைந்து கொண்டார். ராஜநாயக்கன் தமிழ் இலக்கியங்களையும், வேதாகமத்தையும் நன்கு வாசித்து தன்னுடன் பணியாற்றும் தமிழ் இராணுவ வீரர்கள் மத்தியில் நற்செய்திபணி அறிவித்து, 1727 ஜூலையில் மூன்று இராணுவ வீரர்களை தரங்கம்பாடிக்கு அழைத்துவந்து ஞானஸ்நானம் கொடுக்க கேட்டுக்கொண்டார். 1728 இல் ராஜநாயக்கன் தஞ்சாவூரில் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். ரோமன் கத்தோலிக்கர் மத்தியில் கிறிஸ்தவத்தை போதித்ததால், கத்தோலிக்கர்கள் இவரை கொலைசெய்ய கடுமையாக தாக்கிய நேரத்திலும் எல்லா பாடுகளையும், சகித்து சாட்சியுள்ள வாழ்க்கையினால் அநேகர் கவரப்பட்டார்கள்.

ராஜநாயக்கன் ஊழியம்: 1742 இல் ராஜநாயக்கன் தஞ்சாவூரில் ஆசிரியராக பணிபுரிந்துகொண்டே கிராமங்களில் நற்செய்திபணி அறிவித்துவந்தார். இதனால் 1744 -ம் ஆண்டு சூத்திரர் அதிகம் வசிக்கும் இடத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது. ராஜநாயக்கன் தஞ்சாவூரில் வசித்து வந்தாலும் சுவிசேஷகராக எல்லா பகுதிகளுக்கும் சென்று நற்செய்திபணியை அறிவித்தார். இவர் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவராக இருந்ததினால் இவர் சார்ந்த சமூகத்திலிருந்து அதிகமானோர் கிறிஸ்தவர்களானார்கள். ராஜநாயக்கன் 40 ஆண்டுகளாக உபதேசியாராக பணியாற்றினார், ஆனால் ஒருபோதும் லூத்தரன் திருச்சபையில் குருவானவராக அருட்பொழிவு செய்யப்படவில்லை.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் ராஜப்பன் *(1742-1786)*



- *<u>ராஜப்பன்</u>: இவர் 1742 இல் வெள்ளாளர் குடும்பத்தில் கிறிஸ்தவ பெற்றோரின் மகனாகப் பிறந்தார். இவரது தாத்தாவும் லூத்தரன் திருச்சபையிலே உபதேசியாராக இருந்து கிறிஸ்தவத்தைப் பரப்பினார். ராஜப்பன், பள்ளி படிப்பை நிறைவுசெய்த பின்னர் தஞ்சாவூரிலிருந்த பாடசாலையின் ஆசிரியராகவும் லூத்தரன் மிஷன் அச்சு பதிப்பகத்திற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். தரங்கம்பாடி பகுதிகளில் கிறிஸ்தவர்கள் அதிகரித்ததினால் 1777 அக்டோபரில் ராஜப்பன் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் ராஜப்பன் நாட்டு வைத்தியத்தையும் கற்றுக்கொண்டு நாட்டு வைத்தியராகவும் சேவை புரிந்தார்.*
- *<u>குருவானவர் ராஜப்பன்</u>: தமிழ் திருச்சபைகளின் தேவையை கருத்தில் கொண்டு ராஜப்பன் அவர்களுக்கு 1778-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதி அன்று குருத்துவ அருட்பொழிவு (Priest Ordination) செய்யப்பட்டு, மீண்டும் தஞ்சாவூருக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில் 1784 ஆம் ஆண்டில் சுவாட்ஸ் ஐயர், குளோரிந்தா அம்மையார் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப குருவானவர் ராஜப்பனை திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தார். இந்நிலையில் 1788 -ம் ஆண்டு தரங்கம்பாடியில் ஜெர்மானிய மிஷனெரி பிலிப் இறந்தபோது, அங்கிருந்த ஆலயங்களுக்கும், பாடசாலைகளுக்கும் பொறுப்பாக தஞ்சாவூரிலிருந்த ராஜப்பன், மீண்டும் தரங்கம்பாடிக்கு அழைக்கப்பட்டார். அப்படியே திருநெல்வேலி பகுதியில் ஞானஸ்நானம் கொடுக்க தேவைப்படும்போது பாளையங் கோட்டைக்கு சுவர்ட்ஸ் ஐயரால் அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில் குருவானவர் ராஜப்பன் தனது இறுதி நாட்களை தரங்கம்பாடிக்கு அருகே பொறையூரில் கழித்தார். அங்கு தான் 1796 ஆம் ஆண்டு மறுமைக்குள் பிரவேசித்தார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
கற்பகம் சத்தியநாதன் *(1750-1815)*

- *கற்பகம் சத்தியநாதன்: இவர் தஞ்சாவூரில் வெள்ளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் திருச்சியில் இருந்த C.F. சுவாட்ஸ் ஐயருக்கு உதவியாக அனுப்பி வைக்கப்பட்டார். இவர் தாழ்மையான, நம்பகத்தன்மை கொண்ட கரிசனையுள்ள மனிதர், தனக்கு கிடைக்கும் மிகக் குறைந்த ஊதியத்திலிருந்து ஏழைகளுக்கு தாராளமாக கொடுத்தவர். ஆகவே சுவாட்ஸ் ஐயர் சத்தியநாதன் மீது உயர்ந்த மதிப்பையும், பாசத்தையும் கொண்டிருந்து வேதாகமத்தை நன்கு கற்றுக்கொடுத்தார்.*
- *உபதேசியார் சத்தியநாதன்: 1770-ம் ஆண்டு திருச்சியில் Christ Church என்ற ஆலயத்தில் உபதேசியாராக நியமிக்கப்பட்டார். 1774-ம் ஆண்டு தஞ்சாவூர் மராட்டிய மன்னரை ஆங்கிலேயர்கள் பதவி நீக்கம் செய்தபோது சத்தியநாதனும், ராஜப்பனும் தஞ்சாவூர் பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு, அரசியல் நிலவரங்களைக் சுவாட்ஸ் ஐயருடன் பகிர்ந்து கொண்டார்கள். 1780 -ம் ஆண்டு சத்தியநாதன் தஞ்சாவூரில் இருந்தப் பள்ளியில் சுவாட்ஸ் ஐயருடன் ஆசிரியராக பணியமர்த்தப்பட்டார்.*
- *குருவானவர் சத்தியநாதன்: திருநெல்வேலி பகுதிக்கு தமிழ் குருவானவர்களின் தேவை ஏற்படவே 1790 டிசம்பர் 26 அன்று சத்தியநாதன், தரங்கம்பாடி புதிய எருசலேம் ஆலயத்தில் குருவானவராக அருட்பொழிவு செய்யப்பட்டு, திருநெல்வெலி பகுதியின் முதல் ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரி J.C.Janicke அவர்களுக்கு உதவியாக அனுப்பி வைக்கப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் திருநெல்வேலி பகுதியில் எல்லா கிராமங்களுக்கும் கிறிஸ்தவத்தை பரப்பினார். 1804 இல் உபதேசியார்களோடு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதன் காரணமாக தஞ்சாவூருக்குத் திரும்பி, தொடர்ந்து பத்து ஆண்டுகளாக பணியாற்றிய குருவானவர் சத்தியநாதன் 1815 ம் ஆண்டு மறுமைக்குள் பிரவேசித்தார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்.
ராயல் குளோரிந்தா *(1746-1806)*



1)கோகிலா: தஞ்சாவூரில் *1760* இல் ண்டு மராத்திய அரசகுடும்பத்தை சேர்ந்த ஒரு பிராமணரின் இறுதி சடங்கில், அவருடைய மனைவி கோகிலாவை உயிருடன் எரிக்கும் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலுக்காக உயர்ஜாதி பூசாரிகள் ஏற்பாடு செய்துக் கொண்டு இருந்தார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கோகிலா, தன்னை காப்பாற்றும்படி கூச்சலிட்டாள். இவளை யாரும் காபாற்ற முன்வராத நிலையில் அந்த வழியாய் வந்த ஆங்கிலேயபடை தளபதி *Harry Lyttleton* இந்த பெண்ணைக் காப்பாற்றினார். இதற்கு பூசாரிகள் கடும் எதிப்பு தெரிவித்து, இந்த பெண்ணை, அவளுடைய உறவினர்கள் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும், மீறினால் இந்துமதத்திலிருந்து விலக்கப்படுவார்கள் என்று எச்சரித்தார்கள். இதனால் லிட்டல் டான் தன்னுடைய வீட்டிற்கு கோகிலாவை அழைத்துச்சென்றான்.

2). ஞானஸ்நான மறுப்பு: ஆங்கிலேயபடை தளபதி லிட்டில்டான் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கோகிலா *1776* -ம் ஆண்டு தஞ்சாவூரில் *C.F.*சுவாட்ஸ் ஐயரிடம் ஞானஸ்நானம் கொடுக்கும் படியாக கேட்டுக்கொண்டாள். ஆனால் இங்கிலாந்தில் லிட்டில் டானுக்கு, மனைவி மற்றும் பிள்ளைகள் இருக்கும்நிலையில் கோகிலாவை திருமணம் செய்யாமல் கணவன் மனைவியாக வாழ்ந்துகொண்டிருந்ததால் ஞானஸ்நானம் கொடுக்க மறுத்துவிட்டார். இந்நிலையில் ஆங்கிலேயபடை தளபதி *Harry Littleton,*பாளையங்கோட்டைக்கு மாற்றப்பட்டபோது கோகிலா வும் அவனுடன் சென்றாள், சிறிது காலத்தில் லிட்டல்டான் மரித்துப்போனார். இந்த சூழ்நிலையில் *1778*-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பாளையங்கோட்டையில் ஒரு ஆங்கிலேயபடை தளபதிக்கு திருமண ஆராதனை நடத்தவும் அப்படியே அங்கிருந்த ஆங்கிலேய வீரர்களின் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் சுவாட்ஸ் ஐயர் திருநெல்வேலி வந்துசேர்ந்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்•
ராயல் குளோரிந்தா (1746-1806)

ராயல் குளோரிந்தா: பாளையம்கோட்டையில் கோகிலா, சுவாட்ஸ் ஐயரை மீண்டும் சந்தித்து தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டாள். அவளுடைய விசுவாசத்தைக்கண்ட சுவாட்ஸ் ஐயர், 32 வயதான கோகிலாவுக்கு 1788 மார்ச் 3 ஆம் தேதி ராயல் குளோரிந்தா என்று ஞானஸ்நானம் கொடுத்தார். இதற்குப் பின்னர் குளோரிந்தா திருநெல்வேலி பகுதிகளில் பெண்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை பரப்பினார். ஜனங்கள், குளோரிந்தாவை பாப்பாத்தி அம்மாள் என்று செல்லமாக அழைத்தார்கள்.

3).குளோரிந்தாவின் ஊழியம்: திருநெல்வேலி பகுதிகளில் குளோரிந்தா சாதி, மத, பேதம் இல்லாமல் எல்லோருக்கும் நற்செய்தி அறிவித்து, இரண்டு ஆண்டிற்குள் 40 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆகவே ஓலைக்குடிசையில் குளோரிந்தா ஒரு ஆலயத்தை அமைத்து இருந்தார். சுவாட்ஸ் ஐயர் அவ்வப்போது தஞ்சாவூரில் இருந்து ராஜப்பன் மற்றும் சத்தியநாதன் உபதேசியார்களை திருநெல்வேலிக்கு அனுப்பி மேற்பார்வையிட்டார். குளோரிந்தாள் ஒரு பிராமண பெண்மணி என்று அறிந்துக் கொண்ட உயர்சாதி பிராமணர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். இதனால் குளோரிந்தா தன் சொந்த செலவில் பாளையங்கோட்டையில் ஒரு ஆலயத்தை கட்டி, அதை பிரதிஷ்டை செய்ய சுவாட்ஸ் ஐயரை அழைத்தார். திருநெல்வேலிக்கு இரண்டாவது முறையாக சுவாட்ஸ் ஐயர் 1785 - ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி அன்று இந்த ஆலயத்திற்கு Royal Glorinta Church என்று பெயர்சூட்டி மங்கள பிரதிஷ்டை செய்தார். இந்த ஆலயம் தான் திருநெல்வேலி மாவட்டத்தில் சீர்திருத்த திருச்சபையின் முதல் ஆலயம் மற்றும் தாய் திருச்சபை ஆகும். இந்நிலையில் 1787- ம் ஆண்டு பாளையங்கோட்டை பகுதியில் குளோரிந்தா ஒரு பாடசாலையையும் ஆரம்பித்தார். அது இன்று St. John's College ஆக வளர்ந்திருக்கிறது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் ராயல் குளோரிந்தா (1746-1806)

- *4). திருநெல்வேலி கிறிஸ்தவம்: குளோரிந்தா அம்மையார் 1786 -ம் ஆண்டு திருநெல்வேலி பகுதிக்கு ஒரு நிரந்தர போதகர் வேண்டும் என்று தஞ்சாவூரில் இருக்கும் சுவாட்ஸ் ஐயருக்கு கடிதம் எழுதியதினால் உபதேசியாராக இருந்த கற்பகம் சத்தியநாதன் அவர்களை குருவானவராக அருட்பொழிவு செய்துவைத்து திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார். குளோரிந்தா அம்மையாரும் சாதி, கோத்திரம், இனம் மற்றும் பாலினம் பாராமல் ஒவ்வொருவருடைய வீட்டுக்குச் சென்று கிறிஸ்துவின் நற்செய்திபணியை செய்துவந்தார். தாவீது சுந்தரானந்தம் உதவியுடன் விஜயரமபுரத்தில் பாடசாலையை நிறுவுனார்.*
- *5)கோதுமை மணி: 1802 -ம் ஆண்டு திருநெல்வேலி பகுதிகளில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஐயாயிரத்திற்கும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் பாளையங்கோட்டை பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குளோரிந்தா அம்மையார் தனது சொந்த பணத்தைக்கொண்டு ஒரு கிணறு தோண்டினார். இது இன்றும் பாப்பாத்தி அம்மாள் கிணறு என்று அழைக்கப்படுகின்றது. 1806-ம் ஆண்டில் ஒரு நாள் திடீரென்று 60 வயதான குளோரிந்தா அம்மையாரின் மரித்துபோன சரீரம் ஆழமில்லாத தண்ணீர் தடாகத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்பியதற்காக உயர்சாதி இந்து பூசாரிகள் செய்த சூழ்ச்சி என்று இன்றும் கூறப்பட்டு வருகிறது.*
- *விடிவெள்ளிநட்சத்திரம்: குளோரிந்தா அம்மையார்தான் தான் திருநெல்வேலி பகுதியின் முதல் கிறிஸ்தவர் ஆவார். இன்றும் திருநெல்வேலி திருமண்டல ஞானஸ்நான பதிவேட்டில் குளோரிந்தாவின் பெயர்தான் இருக்கிறது. குளோரிந்தா அம்மையார் திருநெல்வேலி திருமண்டலத்தின் மூலைக்கல் என்றும், திருநெல்வேலி கிறிஸ்தவத்தின் விடிவெள்ளி நட்சத்திரம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் தாவீது சுந்தரானந்தம் (1772 - 1806)

- *<u>1).சின்னமுத்து</u>: திருநெல்வேலி மாவட்டத்தில் சாத்தான் குளத்திற்கும், முதலூருக்கும் இடையே கலுங்கடி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட பனை ஏறும் சாணார் பெற்றோருக்கு 1772, மே 1 ஆம் தேதி பிறந்தார். சிறு வயதில் சின்னமுத்து காலரா நோய்க்கு தன்னுடைய பெற்றோர்களை இழக்கக் கொடுத்ததால் தாய்மாமா வீட்டில் சகோதரியுடன் வாழ்ந்து வந்தார். சின்னமுத்து 17 வயதாக இருந்தபோது, கருப்புகட்டியை சந்தைக்கு கொண்டு செல்லாததால், அவனது அத்தை பருப்பு கடையும் மத்தால் ஒட ஒட அடித்தார். இதனால் அவமானம் தாங்கமுடியாமல் தனது கிராமத்தை விட்டு வெளியேறி, கருப்புகட்டி ஏற்றிச்செல்லும் மாட்டுவண்டியில் தஞ்சாவூருக்கு சென்றார். இந்நிலையில் தஞ்சாவூரின் சந்தை வீதிகளில் ஜான் காஸ்பர் கோலஃப் செய்த பிரசங்கத்தால் ஈர்க்கப்பட்டு, அவரைப் பின்தொடர்ந்தார். 1789-ம் ஆண்டில் C.F.சுவாட்ஸ் சின்னமுத்துக்கு, தாவீது சுந்தரானந்தம் என்று ஞானஸ்நானம் கொடுத்து தன்னுடன் வைத்துகொண்டார்.*
- *<u>2). உபதேசியார் தாவீது சுந்தரானந்தம்</u>: சுவாட்ஸ் ஐயர் 1796- இல் சத்தியநாதன் குருவானவருக்கு உதவியாய் இருக்கும்படி சுந்தரானந்தத்தையும் திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார். சுந்தரானந்தம் சுவிசேஷகனாக கிறிஸ்துவின் நற்செய்தியை விஜயராமபுரத்தில் இருந்த தனது குடும்பத்தாருடன் பகிர்ந்து கொண்டதால் 1797இல், 18 பேருக்கு சத்தியநாதன் ஞானஸ்நானம் கொடுத்தார். இந்த ஊரில் இருந்துதான் சாணார் இனத்தார் சமூகத்தில் கிறிஸ்தவம் பரவ ஆரம்பித்தது. தாவீது சுந்தரானந்தம் சாத்தான்குளம் சுற்றியுள்ள கிராமங்களில் கிறிஸ்தவத்தைப் பரப்பியதால் 1797 அக்டோபரில் சண்முகபுரம் கிராமத்தில் 40 பேர் கிறிஸ்தவர்களானார்கள். 1799-ம் ஆண்டு முதலூரில் சிறிய ஆலயம் கட்டப்பட்டு, அதில் தாவீது சுந்தரானந்தம் உபதேசியாராக நியமிக்கப்பட்டார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் தாவீது சுந்தரானந்தம் (1772-1806)



- *4). கிறிஸ்தவ துன்புறுத்தல்கள்:* சாத்தான்குள சுற்றுவட்டாரத்தில் சாணார் சமூகத்தை சேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்களாக மாறிக்கொண்டு இருந்ததினால் உயர்சாதி பூசாரிகளின் தூண்டுதலின்பேரில் நற்செய்தி எதிர்ப்பாளர்கள் தாக்க ஆரம்பித் தார்கள். பனை ஓலையினால் கட்டப்பட்டிருந்த ஆலயங்களை தீயிலிட்டு எரித்து, கிறிஸ்தவர்களின் வீடுகளை கொள்ளை யடித்தார்கள். பொய் குற்றச்சாட்டின்பேரில் கிறிஸ்தவர்களை கைது செய்து, சித்திரவதை செய்து, கிறிஸ்தவ பெண்களை மானபங்கமும் செய்தார்கள். கிறிஸ்தவர்களின் கால்நடைகளும், வெள்ளாமைகளும் அபகரித்துக் கொண்டு, கிராமங்களில் இருந்து ஒதுக்கி வைத்து, பனை ஏறவும், விவசாயம் செய்யவும், தொழில் செய்யவும் அனுமதி மறுக்கப்பட்டன.
- *5). முதலூர்:* இந்நிலையில் பாளையங்கோட்டையில் ஆங்கிலேய படை தளபதி எவரெட் (Everett) கொடுத்த பண உதவியுடன், தாவீது சுந்தரானந்தத்தின் முழு முயற்சியினால் 1799-ல் சாத்தான் குளத்திற்கு அருகே கிறிஸ்தவர்களுக்காக ஒரு கிராமம் வாங்கப்பட்டு, அதில் 28 குடும்பங்கள் குடியேற்றப்பட்டார்கள். ஆகவே இது முதலூர் (முதல் ஊர்) என்று அழைக்கப்படுகிறது. 1800 ஆம் ஆண்டில், முதலூர் மக்கள் தொகை 200ஐ எட்டியது.
- *6). அடைக்கல பட்டணங்கள்:* 1802 - 1803 ஆம் ஆண்டில் தாவீது சுந்தரானந்தத்தின் ஊழியத்தினால் சாத்தான்குளம் சுற்றுவட்டாரத்தில் 70 கிராமங்களில் இருந்து சுமார் 5382 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே கிறிஸ் தவர்களின் பாதுகாப்பிற்காக பல அடைக்கல பட்டணங்கள் உருவாக்கப்பட்டது. இவற்றில் சாயர்புரம், நாசரேத், சமாரியா, பெத்லகேம், ஜெருசலேம், கடையல், கடாட்ச்சபுரம், அன்பின் நகரம், கிறிஸ்டியன் நகரம், மற்றும் சுவிசேஷபுரம் போன்ற கிராமங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் தாவீது சுந்தரானந்தம் *(1772-1806)*

- *7). தடிக்கொம்பு கிறிஸ்தவ இளைஞர் சேனை:* தாவீது சுந்தரானந்தத்தால் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அநியாயத்தை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க தடிக்கொம்பு கிறிஸ்தவ இளைஞர் சேனை என்ற அமைப்பை ஏற்படுத்தி, தற்காப்புகலை, சிலம்பாட்டம், வர்மக்கலை மற்றும் மல்யுத்த பயிற்சி அளித்தார். இந்த சங்கத்தில் பல இளைஞர்கள் இணைந்து, எங்கெல்லாம் நற்செய்தி எதிர்ப் பாளர்கள், கிறிஸ்தவர்களை தாக்குகின்றார்களோ அந்த இடத்திற்கு சென்று கிறிஸ்தவர்களைப் பாதுகாத்து, எதிரிகளை விரட்டியடித்தார்கள்.சுந்தரானந்தத்தின் இந்த நடவடிக்கைகளை மிஷனரிகள் விமர்ச்சித்து, இது கிறிஸ்துவின் அன்பை வெளிப் படுத்தவில்லை என்று குறைகூறினார்கள். ஆனால் கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள், அந்த காலகட்டத்திற்கு தேவையாய் இருந்தது.
- *8). திருநெல்வேலியின் இரத்தசாட்சி:* கிறிஸ்தவர்களின் வளர்ச்சியை தடுத்துநிறுத்த விரும்பிய நற்செய்தி எதிர்ப் பாளர்கள், 1806, ஆகஸ்ட் 15 ம் தேதியில் பெத்லகேம் கிராமத்தில் நடைபெற்ற பண்டிகைக்கு சென்ற சுந்தரானநதத்தின் உணவில் கொடிய விஷத்தை கலந்தார்கள். இதையறியாமல் உட்கொண்ட 34 வயது கொண்ட தாவீது பெத்லகேமில் இருந்து முதலூருக்கு திரும்பிச் செல்லும் வழியில் அகால மரணம் அடைந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் சாணார் வகுப்பை சேர்ந்த முதல் கிறிஸ்தவரும் முதல் உபதேசியாருமாய் இருந்த தாவீது சுந்தரானந்தம் திருநெல்வேலி கிறிஸ்தவத்தின் முதல் இரத்தசாட்சியும் ஆவார். இவர்தான் முதலூரின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலம், தாவீது சுந்தரானந்தம் ஊழியம் செய்த 70 திருச்சபைகள் கொண்ட திருச்சபை மன்றத்தை நிறுவி, பெருமை சேர்த்துள்ளது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன்
வேதமாணிக்கம் மகாராசன் *(1763-1827)*



- *1). மகாராசன்: இவர் நாகர்கோயிலுக்கு அருகிலுள்ள மயிலாடி என்ற கிராமத்தை சேர்ந்தவர். இவரது மூதாதையர்கள் தஞ்சாவூரில் விவசாய தொழில் செய்து கொண்டிருந்தார்கள். மகாராசன் ஒரு சிவ பக்தராக இருந்து அமைதி வேண்டி, கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் கோவிலுக்கு புனித யாத்திரை மேற்கொண்ட நேரத்தில் ஜான் காஸ்பர் கோலப் நற்செய்தி மூலம் 1804 ல் தஞ்சாவூரில் கோலஃப் ஐயர் மகாராசனுக்கு வேதமாணிக்கம் என்று ஞானஸ்நானம் கொடுத்தார்.*
- *2). வேதமாணிக்கத்தின் ஊழியம்: இவர் தஞ்சாவூரிலிருந்து தனது சொந்த கிராமமான மயிலாடிக்குத் திரும்பி, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க ஒரு கூட்டமாக கூட்டி, அவர்களுக்கு வேதவசனங்களைப் படித்துக் காட்டி, அவர்களுக்குமார்டின் லூத்தரின் ஞான உபதேசத்தை வினா விடை என்ற மார்டின் லூதர் உபதேசத்தை கற்பித்த அவருடைய மனைவி உட்பட 30 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இவர்களுக்கு பாளையங்கோட்டையை சேர்ந்த உபதேசியார் ஏசுவடியான், அவ்வப்போது தென் திருவிதாங்கூர் பகுதியில் இருந்த மயிலாடிக்கு வந்து அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார்.*
- *3). ரிங்கல்தௌபே: வேதமாணிக்கம் அவர்களின் அயராத நற்செய்திபணியினால் மயிலாடியின் சுற்றுவட்டார பகுதிகளில் அநேகர் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு ஆயத்தமாக இருந்தார்கள். ஆகவே கோலஃப் ஐயரிடம் ஒரு மிஷனெரியை கேட்டு பெற்றுக்கொள்வதற்காக தஞ்சாவூருக்கு சென்றார். அப்போது லண்டன் மிஷன் சங்கத்திலிருந்து வந்திருந்த ரிங்கல்தௌபே எவ்விடத்தில் நற்செய்திபணி செய்யவேண்டும் என்ற கோலஃப் ஐயரின் வழிகாட்டுதலுக்கு காத்திருக்கும்போது வேதமாணிக்கம் அவரை சந்தித்து தென்திருவிதாங்கூர் வரும்படி கேட்டுக்கொண்டதை ரிங்கல்தௌபே ஏற்றுக்கொண்டார்.*

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் • மகாராசன் வேதமாணிக்கம் (1763-1827)

4).உபதேசியார் வேதமாணிக்கம்: ரிங்கல்தௌபே, வேதமாணிக்கத்தோடு 1806 ஏப்ரல் 25- ம் நாள் மயிலாடி வந்து சேர்ந்து அங்கிருந்த தாழ்த்தப்பட்ட ஈழவர்கள், புலையர்கள், குறவர்கள், சாணார்கள் மத்தியில் நற்செய்திபணி செய்ய ஆரம்பித்தார். 1809-ஆம் ஆண்டில் வேதமாணிக்கம் மற்றும் ஞானமுத்து ஆகியோர் கொடுத்த நிலத்தில் மயிலாடியில் முதல் ஆலயத்தை கட்டி, 40 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்து, வேதமாணிக்கத்தை உபதேசியாராக நியமித்தார். இதுதான் தென்திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் முதல் சீர்திருத்த திருச்சபை ஆகும். ரிங்கல்தௌபே மேலும் 12 ஆண்டுகள் நற்செய்தி அறிவித்து ஆத்திக்காடு, தாமரைக்குளம், பிச்சை குடியிருப்பு, புத்தளம், கோவில்விளை, ஈத்தாமொழி ஆகிய 7 ஆலயங்களை கட்டி 1,100 ஞானஸ்நானம் கொடுத்தார். 181 இல் ரிங்கல்தௌபே கிறிஸ்துமஸ் பண்டிகையை மயிலாடியில் கொண்டாடிவிட்டு வேதமாணிக்கத்தை குருவானவராக அருட்பொழிவு செய்து, புதியமிஷனெரி வரும்வரை தற்காலிகமாக நியமித்து தாய்நாடு சென்றார்.

5). குருவானவர் வேதமாணிக்கம்: வேதமாணிக்கம் பல கிராமங்களுக்குச் சென்று, பிரசங்கித்து, ஜெபக்கூட்டங்களை நடத்தி, வேத வாசிப்புகளை முறைப்படுத்தி, திருச்சபை நிர்வாக கூட்டங்களை சிறப்பாக நடத்தி, இரண்டு ஆண்டுகள் சிறப்பாக ஊழியம் செய்ததன் விளைவாக அதிக ஆத்துமா ஆதாயம் செய்தார். 1817 டிசம்பர் மாதத்தில் லண்டன் மிஷனரி சங்கம் சார்பாக சார்லஸ் மீட்(Charles Mead) வந்தபோது வேதமணிக்கம் வரவேற்று, ரிங்கல்தௌபே மூலம் பெற்றிருந்த பொறுப்பை ஒப்படைத்தார். வேதமாணிக்கம் தொடர்ந்து 9 ஆண்டுகள் சார்லஸ் மீட் உடன் இணைந்து பணியாற்றி 1827-ம் ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்தார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் வேதநாயகம் சாஸ்திரியார் *(1774 - 1864)*

- <u>வேதநாயகம்</u>: திருநெல்வேலியில் *1774* செப்டம்பர் *7* ம் தேதி ரோமன் கத்தோலிக்க பெற்றோருக்கு வேதநாயகம் பிள்ளை பிறந்தார். கத்தோலிக்க குருமார்களிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக வேதநாயகத்தின் பெற்றோர் *1785*-இல் லூத்தரன் திருச்சபையில் அங்கத்தினர்களானார்கள்.
- <u>*2*). வேதநாயகமும் சரபோஜி இளவரசனும்</u>: *1785* இல் குளோரிந்தா கட்டியிருந்த ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய பாளையங்கோட்டக்கு சுவாட்ஸ் ஐயர் வந்திருந்தபோது *12* வயதான வேதநாயகத்தின் பண்பையும், அறிவுத்திறனையும் கண்டு தன்னுடன் தஞ்சாவூருக்கு அழைத்துச்சென்றார். மரணப்படுக்கையில் இருந்த தஞ்சாவூர் மன்னர் துளசி, பத்து வயதான தனது வளர்ப்பு மகன் சரபோஜியை சுவாட்ஸ் ஐயரிடம் ஒப்படைத்தார். ஆகவே வேதநாயகமும், சரபோஜி இளவரசனும் சுவாட்ஸ் ஐயரின் சொந்த பிள்ளைகளாக வாழவும் மூன்று ஆண்டுகளாக ஒன்றாக படிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது. பின் *1789*-ம் ஆண்டு தரங்கம்பாடியில் இருந்த இறையியல் கல்லூரிக்கு சுவாட்ஸ் ஐயரால் அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிறந்த வேதபண்டிதர்களிடம் கற்றுக்கொண்டார். இந்நிலையில் *1793*- ஆம் ஆண்டில் சுவாட்ஸ் ஐயர் மூலமாக தஞ்சாவூர் தமிழ் பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இக்கால கட்டத்தில் வேதநாயகம் தமிழ் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். கவிபாடும் திறன் இவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்ததால் அண்ணாவியார் என்ற சிறப்பு பெயர்கிடைத்தது. *1798* இல் சுவாட்ஸ் ஐயர் மரித்துப்போகவே தனக்கு கல்வி கற்றுக்கொடுத்து, சிறந்த மனிதராக தம்மை மாற்ற உதவிய சுவாட்ஸ் ஐயரை தனது நூல்களில் எழுதியும், பாடியும் நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷன் வேதநாயகம் சாஸ்திரியார் (1774 - 1864)

- 3). வேதநாயகம் சாஸ்திரியார்: 1794 - 1808 இல் 52 நூல்களை வேதநாயகம் எழுதினார். 1815-ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் நாளில் திருச்சியிலிருந்த ஜெர்மானிய லூத்தரன் மிஷனெரி போலே என்பவர் வேதநாயகத்திற்கு அங்கி அணிவித்து வேதநாயக சாஸ்திரியார் என்னும் பட்டத்தை சூட்டினார்.
- 4). அரண்மனைக்கு தடை: தஞ்சாவூர் மன்னர் சரபோஜி, தம் இளமைப் பருவத்திலுள்ள நட்பினை மறந்துவிடாமல் வேதநாயகரை அண்ணா என்றே பாசத்துடன் அழைப்பார். சரபோஜி மன்னன் தனது தெய்வமான பிள்ளையாருக்கு பெருமை சேர்க்கும் ஒரு பாடலை பாடும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு வேதநாயகம் என்னுடைய கடவுள் இயேசு கிறிஸ்துவை தவிர வேறு எந்த தெய்வத்திற்கும் பெருமை சேர்க்கும்படியாக பாடமாட்டேன் என்று அன்புடன் பதில் கொடுத்தார். 1832 -ஆம் ஆண்டு சரபோஜி மன்னர் மரணமடைந்த பின்னர் அவருடைய மகன் சிவாஜி மன்னராக வந்தபின்னர் கிறிஸ்தவர்களை பகைத்ததுடன் வேதநாயகம் சாஸ்திரியாரை அரண்மனைக்குள் வராதபடி தடைசெய்தார்.
- 5). படைப்புகள்: வேதநாயக சாஸ்திரியார் தமிழ் இலக்கிய போக்கு, தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய மரபை அடிப்படையாகக்கொண்டு 77 நூல்களை எழுதி கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சிக்கு ஆதாரமாக்கினார். இவரால் எழுதப் பட்ட 500 ஞானபதக் கீர்த்தனைகள் மூலமாகவே தமிழ் கிறிஸ்தவர்களிடம் அறியப்பட்டு வருகிறார். இன்றும் இவர் பாடிய கீர்த்தனைகள் தமிழ் திருச்சபைகளில் பாடப்பட்டு வருகிறது. 1864 ஜனவரி 24 ளில் 91 வயதான வேதநாயக சாஸ்திரியார் மரணமடைந்தல் அவருடைய சரீரம் தஞ்சாவூரில் அடக்கம் செய்யப்பட்டது. சுவாட்ஸ் ஐயரால் உருவாக்கப்பட்ட முத்து. வேதநாயகம் சாஸ்திரியார் என்றால் மிகையாகாது.

தரங்கம்பாடி லூத்தரன் மிஷனின் • பொற்காலம் (1706-1800)



1).<u>ஆத்துமா ஆதாயகர்கள்</u>: சீர்திருத்த திருச்சபையை சேர்ந்த டேனிஷ் மிஷனெரிகள் தரங்கம்பாடி, சென்னை, கடலூர், தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருவிதாங்கூர் மற்றும் கல்கத்தா வரைச்சென்று கிறிஸ்தவத்தை பரப்பினார்கள். 1707-ம் ஆண்டு முதல்1846 -ம் ஆண்டு வரை இடையில் 57 டேனிஷ் லூத்தரன் மிஷனெரிகள் இந்தியாவுக்கு வந்தார்கள். இதில் 20 பேர் மரித்து, தரங்கம்பாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அப்படியே 22 பேர் தமிழ்நாட்டின் பிற இடங்களில் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மீதமிருக்கும் 15 பேர் மட்டுமே தங்கள் தாய்நாட்டிற்கு திரும்பிச் சென்றுள்ளார்கள்.

2). <u>ஆத்துமாக்கள் அறுவடை</u>: இந்தியாவில் டேனிஷ் மிஷன் மூலமாக தரங்கம்பாடியில் 19,340 ஆத்துமாக்கள், சென்னையில் சுமார் 2300 ஆத்துமாக்கள், கடலூரில் சுமார் 2200 ஆத்துமாக்கள், திருச்சியில் சுமார் 2150 ஆத்துமாக்கள், தஞ்சாவூரில் சுமார் 1600 ஆத்துமாக்கள், இராமநாதபுரத்தில் சுமார் 2400 ஆத்துமாக்கள், கல்கத்தாவில் சுமார் 1200 ஆத்துமாக்கள், திருநெல்வேலியில் சுமார் 6800 ஆத்துமாக்கள், என்று ஒட்டுமொத்தமாக 18-ஆம் நூற்றாண்டில் சுமார் 50,000 ஆத்துமாக்களை அறுவடை செய்துள்ளார்கள். 3). பொற்காலம்: சீகன்பால்க், பெஞ்சமின் சுல்ட்ஸ், பிலிப் ஃபெபப்ரீசியஸ், கிறிஸ்டியன் பிரடெரிக் சுவாட்ஸ், ஜான் காஸ்பர் கோல்ஃப் போன்ற லூத்தரன் மிஷனெரிகள் இந்தியாவில் சீர்திருத்த திருச்சபையின் முன்னோடி மிஷனெரிகள் ஆவார்கள். 18-ஆம் நூற்றாண்டின் இந்திய கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை வரலாற்றில் லூத்தரன் திருச்சபைகளின் பங்களிப்பு பொற்காலம் ஆகும்.

ஐரோப்பிய, அமெரிக்க திருச்சபைகளில் எழுப்புதல்



- *<u>1). ஐரோப்பாவில் அறிவுப்புரட்சி</u>: கிபி 1700- களில் ஐரோப்பிய மனிதசிந்தனையில் (Enlightenment) ஏற்பட்ட மாற்றம் கிறிஸ்தவத்தையே தலைகீழாக புரட்டிப்போட்டது. எப்படியெனில் விஞ்ஞானமும், மேற்கத்திய நாட்டு தத்துவங்களும், திருச்சபையையும், கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கையை தகர்த்தது. திருச்சபைக்கு வருவோரின் எண்ணிக்கையை கணிசமாக குறைந்த சூழ்நிலையில் பலர் திருச்சபை இழந்து போன மகிமையை திரும்ப கொண்டுவர விரும்பினார்கள்.*
- *<u>2).முதலாவது பெரிய எழுப்புதல் (1720 -1740)</u>: அமெரிக்கா தேசத்து திருச்சபைகளில் பெரும் எழுப்புதல் உண்டாயிற்று. இந்த காலகட்டமானது தனிப்பட்ட மனிதனின் விசுவாசத்தை கட்டி எழுப்புவதாக இருந்ததால் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் புத்துணர்ச்சி பெற்றவர்களானார்கள். எங்கு பார்த்தாலும் உயிர் மீட்சி கூட்டங்களும், வேதாகம கருத்தரங்களும் நிரம்பியதால் மக்கள் மீண்டும் திருச்சபைக்கு வர ஆரம்பித்தார்கள். இந்த எழுப்புதல் மூலமாக குடும்பத்திலும், திருச்சபைகளிலும், சமுதாயத்திலும், சமூக தீமைகளான மது அருந்துதல், போதைப் பொருட்கள் பயன்படுத்துதல், விபச்சாரம், மற்றும் பெண்களின் உரிமைகள் போன்றவற்றில் பெரிய சீர்திருத்தம் உண்டாயிற்று.*
- *<u>3). முதல் பெரிய எழுப்புதல் முன்னோடிகள்</u>: அமெரிக்காவின் திருச்சபைகளை சேர்ந்த யோனத்தன் எட்வர்ட்ஸ், ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட், கில்பர்ட் Tennentone ஆகியோர் முதலாவது பெரிய விழிப்புணர்வின் முன்னோடிகள் என்று புகழப்படுகிறார்கள். மேலும் டேவிட் பிரைனார்ட், சாமுவேல் டேவிஸ், சாலமன் ஸ்டோடார்ட் (Stoddard), தியோடர் Frelinghuysen ஆகியோரின் செய்திகள் அமெரிக்கா தேசத்தையே அசைத்தது. இவர்கள் ஒவ்வொரு நகரமும் சென்று, பிரசங்கித்து, பாவங்களிலிருந்து விடுதலைபெற இரட்சிப்பை வலியுறுத்தினார்கள்.*

ஐரோப்பிய, அமெரிக்க திருச்சபைகளில் எழுப்புதல்







- *5). இரண்டாவது பெரிய எழுப்புதல் (1790-1850):* இந்தமுறை இங்கிலாந்து தேசத்து திருச்சபைகளில் பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. மெதடிஸ்டு மற்றும் பாப்டிஸ்டு திருச்சபைகள் அதிக அளவில் நிறுவப்பட்டன. இதன்மூலமாக பல வேதாகம கல்லூரிகளும், மிஷனெரி சங்கங்களும் உருவாயின. ஒவ்வொரு திருச்சபையிலும் மிஷனெரி தாகம் கொண்டவர்கள் அதிகரிக்க ஆரம்பித்தார்கள். எங்கும் ஆத்தும ஆதாயம் பற்றிய பேச்சுக்களாகத்தான் இருந்தது. இதில் ஜான் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லியின் பாடல்கள் உலகமெங்கும் பரவ ஆரம்பித்தது.
- *6).மிஷனெரி தாகம்:* இரண்டாவது பெரிய எழுப்புதலில் கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் சென்று ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை நன்கு படித்த மேல்தட்டு வர்க்கத்தினர்களிடம் தோன்றிற்று. ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவர் மிஷனெரியாக மற்ற நாடுகளுக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. சில குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, அனுப்பப்படும் மிஷனெரி களை தாங்க வேண்டும் என்ற வேட்கை உண்டாயிற்று. தொழில் செய்கிறவர்கள் எல்லோரும் கிறிஸ்துவை அறியாத நாடுகளில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வி அறிவை கொடுக்கும் பாடசாலைகளையும், மருத்துவமனைகள் அமைப்பதற்கு தேவையான மருத்துவ உபகரணங்களை வாங்கவும், மருத்துவமனைகளை கட்டுவதற்கும், வேலைவாய்பில்லாத மக்களுக்கு தொழிற்கூடங்களை அமைக்கவும், ஆலயங்கள் கட்டவும், வேதாகமத்தையும், கிறிஸ்தவ போதனைகள் அடங்கிய புத்தகங்களை அச்சிடவும் தங்கள் பொருளாதாரத்தை கொடுக்க முன்வந்தார்கள். இந்த இரண்டாம் எழுப்புதலை ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் மற்றவர்களுக்காக தங்களையே கொடுக்க கிறிஸ்தவர்கள் ஆர்வமாக இருந்தார்கள்.

Modern Missionary Movement
நவீனகால மிஷனெரி இயக்கம்:





- *1).வில்லியம் கேரி: இவர் பெரிய எழுப்தலின் காலகட்டத்தில் 1761-ம் ஆண்டு பிறந்தார். இயற்கையாகவே பலமொழிகளை கற்றுக் கொள்ளும் ஆர்வம் இருந்ததால் அவருடன் வேலை செய்யும் நண்பரிடம் இருந்த கிரேக்க இலக்கண புத்தகத்தை கடன் வாங்கி படித்து அதன்மூலம், புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழியை கற்றுக்கொண்டார். பின்னர் எபிரேயம், இலத்தீன், இத்தாலியம், டச்சு மற்றும் பிரஞ்சு மொழிகளையும் கற்றுக்கொண்டு 1785-ஆம் ஆண்டில் 25-ம் வயதில் பாப்டிஸ்டு திருச்சபையில் போதகரானார்.*
- *2). போதகர்கள் கருத்தரங்கு: இங்கிலாந்தில் 1786-ம் ஆண்டு நடந்த போதகர்கள் கூட்டத்தில், வில்லியம் கேரி கிறிஸ்துவின் நற்செய்தியை உலகம் முழுவதும் கொண்டு செல்வது எல்லா கிறிஸ்தவர்களின் கடமையா? என்ற கேள்வியை எழுப்பினார். இதற்கு பதிலளித்த சபையின் தலைவர்: "இளைஞனே, உட்காருங்கள்; பிறஇனத்தாரை மாற்ற, கடவுள் விரும்பும்போது, அவர் உங்கள் உதவியையும் என்னுடைய உதவியும் இல்லாமல் செய்வார்" என்று வாயடைக்கும்படி கூறினார்.*
- *3). பாப்டிஸ்ட் மிஷன் சங்கம்: 1789 இல் ஒரு மிஷனரி கூடுகையில் ஏசாயா 54: 2-3 ஐ பயன்படுத்தி கிறிஸ்துவை அறியாதவர்களின் வாழ்க்கையில் மாற்றத்திற்கான வழிமுறைகளை கொண்டுவருவது ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் கடமை என்று கேரி தீர்க்கமாக கூறினார். இதில் அவர் பயன்படுத்திய வாக்கியம் Expect great things from God; attempt great things for God (கடவுளிடம் இருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்; கடவுளுக்காக பெரிய காரியங்களை செய்யுங்கள்) என்பதாகும். இதன் விளைவாக இங்கிலாந்தில் 1792-ஆம் ஆண்டில் பாப்டிஸ்ட் மிஷனரி சங்கம் உருவானது. இதன் தொடர்ச்சியாக 1793 -ம் ஆண்டு தனது 32-ம் வயதில் வில்லியம் கேரி, இந்தியாவில் கல்கத்தாவுக்கு ஒரு பாப்டிஸ்ட் மிஷனரியாக மனைவி டோராதி மற்றும் நான்கு குழந்தைகளுடன் வந்து சேர்ந்தார்.*

Bibliography

1) C. B. Firth, An Introduction to Indian Church History (Madras: CLS, 1992).
2) Jeyaraj, Daniel: Bartholomäus Ziegenbalg: the Father of Modern Protestant Mission, New Delhi: Indian Society for Promoting Christian Knowledge, 2006.
3) Jeyakumar, Arthur, History of Christianity in India: Selected Theme. Delhi: ISPCK. 2002
4) Neill, Stephen, A History of Christianity in India: 1708 – 1858. Cambridge: Cambridge University Press, 1985.
5) Mundadan, A. Mathias. History of Christianity in India. vol. 1. Bangalore: Theological Publications, 1984.
6) A. Mingana, The Early Spread of Christianity in India (Manchester: University Press, 1925).
7) Lehmann, A.: It began in Tranquebar, Madras: Christian Literature Society, 1956.
8) G. P. Fisher, The History of Christian Church (London: Hider & Slaughter, 1992)
9) Downs, F. S, History of Christianity in India, Bangalore: The Church History Association of India, 1992.
10) C. M. Augur, Church History of Travancore (Madras: SPS Press, 1903).
11) Dharmaraj, Jacob S. Colonialism and Christian Mission: Postcolonial Reflection, Delhi: ISPCK, 1993.
12) Rajendran, K. Which Way Forward Indian Missions. Bangalore: SAIACS Press. 1998.
13) Mayhew, Arthur. Christianity in India. Delhi: Gian Publishing House, 1998.
14) Newbigin, Lesslie. The Good Shepherd. Madras: CLS, 1974
15) David, M. D, Western Colonialism in Asia and Christianity, Bombay: Himalaya Publishing House. 1988

THE END.

Produced By: Gamaliel Bible College, Mumbai, India

For Your Feedback: ddavidmumbai@gmail.com

God Bless You to Bless Others…